# பிரஜாநுகூலன்.

அநுபவ விநோதங்களடங்கிய மாதப்பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 2.] Copy Right. [வெளிநாடு ரூ. 2—8—0.

| | | |
|---|---|---|
| வருஷம் 14. | திரிச்சிராப்பள்ளி:<br>மே மீ—1918. | மாதம் 6. |


## ஒரு மாதத்தின் அநுபவங்கள்.

ஒருவருக்கொருவர் விரோதப்பட்டுக் கொள்வதில் பெண்பாலாருக்கு மிஞ்சினவர்களில்லை. அப்படியே ஒன்றுகூடிக் கொள்வதிலும் அவர்களுடைய சாமர்த்தியம் மற்றவர்களுக்கு வராது. ஒரு வீட்டினுள் பெண்கள் நுழைந்ததும் உடனே அவர்கள் வெகுநாள் பழகியவர்கள் போலாய் விடுவார்கள்.

நன்றாக நித்திரை செய்வதற்குக் கொடுத்து வைத்த காலம் பால்ய பருவமே. யௌவனத்திலோ அந்த அவஸ்தையில் நித்திரை ஏது? இனி மூப்பிலோ பிணிகள்—இருமல், கடன் தொல்லை—விசாரம்!

சில நண்பர்கள் தங்களின் வாழ்வு வெளிப்பகட்டென்றும், வீட்டில் உப்பு பருப்பு வாங்கித் தருவதற்குக்கூடக் கையில் காசு இருப்பதில்லையென்றும் தம்மை நேசிப்பவர்களிடம் கூறுவர். இந்த அந்தரங்கமுணர்ந்ததும் இன்னும் அதிகமாக அவர்களை நேசிக்க விரும்புவோர் ஒருவகுப்பினர். சே! இவனிடம் பசையில்லையென்று நீங்கிவிடப் பார்ப்போர் இன்னொரு சாரார்.

தன் ஏழ்மையைப் பிறரிடம் தெரிவித்துக்கொள்வதில் அவர்களிடமிருந்து அன்பையும் தயையும் உதவியையும் பெறுவதும் சில இடங்களில் கூடும். இதற்கு மாறாகத் தன்னை அலக்ஷியம் செய்து அவமதிக்கும் காட்சிகளையும் அவன் சில இடங்களில் காணப்பெறலாம்.

நமது பெண்ணைக் கொடுப்பதற்கு முன்பு மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து வருகிற கடிதங்களெல்லாம் வெகு ருசி தான்; மரியாதைகள் தான்.

விவாகத்திற்குப் பின்னும் இப்படியே இருந்தாலல்லவோ? எப்படியோ மனஸ்தாபங்கள் மூண்டுகொண்டு 10-கடிதங்களுக்கு ஒரு பதில் வருவது கூட அரிதாய் விடுகிறது!

பெண்மணியே! உன் கணவனுருக்கு அன்னம் பரிமாறுகையில் கடைசிசாதம் அவர் கையிலும் வாயிலும் இருக்கும்போதே இலையில் சாதம் போட வந்துவிடுகிறாய்.

அதனால் அவர் அவசரமாக கையிலுள்ள சாதத்தைப் புசிக்கவேண்டிய தாகிறது. அதனால் அவர் நெஞ்சமும கொஞ்சம் கோணுகிறது ஆகவே கடைசி சாதத்தையும் சாப்பிட்டு ஆகும்வரை பொறுத்துக் கொண்டு நின்று, அப்பால் அன்போடும் பரிமாறுக.

ஸஹோதரியே! உனக்கு ஒரு வார்த்தை. உனது பர்த்தா இல்லாத போது அவருக்கு வேண்டியவர்களாயிருந்து அவரைத் தேடிவந்தால், அவர்களைச் சாப்பிட்டுவிட்டுப் போகும்படி சொல்லு இல்லையாகில் தாகத்திற்காவது ஜலம் கொடுத்து அனுப்பு. "அவர் இல்லை"—என்று சொல்லித் தொலைத்து கதவை மூடிக்கொண்டு உள்ளே போய்விடாதே.

பொறுமையற்ற எழைமனிதன் எண்ணெயில்லாத தீபத்திற்குச்சமானம். (2) வியாதிவருவது, பாரக்கணக்கில், அது தொலைவது வீராகனிடைக் கணக்கில். (3) வேலையிழந்த வித்வான் மழைபொழியா மேகம்.

ஒருவன் பொருளை வைத்துக் கொண்டு இதனை யநுபவிக்கப் பிள்ளையில்லையே என்று துக்கிக்கிறான். பொருளுக்குப் பிள்ளையா? அல்லது பிள்ளைக்குப் பொருளா?

வாய் ஒன்றாகவும் காது இரண்டாகவும் என் சிருஷ்டிக்கப்படவேண்டும்? காது இரண்டும், வாய் ஒன்றுமாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதின் குறிப்பு—"அதிகமாய்க் கேள், கொஞ்சமாய்ப்பேசு"—என்பதற்காம்.

## விநோதங்கள்.

(1) "உன் மூத்தமாப்பிள்ளை பேரில் என் விசேஷப் பிரியம்?" என "அவர்தான் என் மனதுக்கு ஒத்தவர்"—என்றான்.

(2) மனைவி:—என் பிராணநாயகா; தாங்கள் என்னை விவாகம் செய்யுமுன் நான் கிடைப்பேனா - இல்லையோ என்ற சந்தேகத்தோடு அடிக்கடி

எனக்குக் கொடுத்து வந்த அந்த முத்தத்தின் மாதிரியை இப்போது முற்றிலும் மறந்துவிட்டீர்களே! ஏன் அப்படி?

(3) காமத்திற்குக் கண்ணில்லை என்கிறார்களே! கண்ணுக்கு வினையா காமமிருக்கிறது? காமம் கலவாத காதல் உண்டா?

## அவதூறு.

எந்த மனிதனையும் பற்றி யாதொரு அபிப்பிராயமும் சொல்லாதிருப்பது ஸர்வோத்தமம். ஒருவேளை சொன்னாலும் நன்மையாகச் சொல்வதவசியம். ஒரு மனுஷ்யன் கெட்டவனென்று சொல்வதால் நமக்கேதேனும் பிரயோஜனமுண்டா? பிறருடைய மனஸ்தாபத்தை யேற்பது பாம்புப் புற்றுக்குள் கையை விடுவது போலாம். நல்ல காலம் இருக்கும்வரை புற்றுப்பாம்பு வெளியே வராது. கெட்டகாலம் வந்தால் உடனே அந்த ஸர்ப்பம் வெடுக்கென்று கடிக்கும். அந்த துஷ்காலத்தில் அற்ப நிந்தனைகூடப் பெரிய நிந்தனையாகி வக்கிலிடம் செல்லநேரும். ஸம்பாதிக்க சக்தியற்றவன் தந்தை தேடிய ஆஸ்தியையேனும் பத்திரப்படுத்தி வைத்தாலன்றோ ஸாமர்த்தியனாவான்? வீணே பிறரை நிந்தித்து பலவித கேஸுகளில் அகப்பட்டுக்கொண்டு ஆஸ்தியைப் பறிகொடுப்பதில் என்ன பயன்? "அவன் சொல்லும்போது நான் கேட்டேன்" என்று பிறர் மீது தோஷாரோபணம் செய்வதால் பலவித மனஸ்தாபங்களுண்டாகி அமைதிக்கு ஹானி நேரிடுகிறது. அநேக கொலைகளும் சண்டைகளும் அவதூறு வார்த்தைகளால் உண்டாகின்றன.

## மனுஷ்ய ஜென்மம்.

எல்லாப் பிறவிகளிலும் மானிடப் பிறவி சிறந்ததென்று தெரியாதவர்கள் கூறுகின்றனர். மனுஷ்யனுக்கு நேரிடும் கஷ்டநஷ்டங்கள் இதர பிராணிகளுக்கு சம்பவிக்காது. பக்ஷிகள் கவலையற்று உத்ஸாகமாய் ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றன. வனத்திலுள்ள மான்கள் கவலையின்றித் துள்ளி விளையாடுகின்றன. கடவுளுடைய திறமையையும் அழகையும் விளக்கவந்தது போல், மிருதுவான புஷ்பங்கள் இயற்கையான வாஸனையை வீசி நாவிகங்களுக்கு இன்பத்தை விளைக்கின்றன. இளந்தளிரின் அழகையும் மேன்மையையும் பற்றிச் சொல்லவேண்டியதில்லை. அருவிகளின் திவலைகள் முத்துக்களைப்போல் பிரகாசிப்பதையும், எழும்பிக் குதிப்பதையும் கண்டு என் மனம் மிகுந்த ஸந்தோஷமடைகிறது. ஆதலின் மனுஷ்யஜன்மம் சிலாக்கிய மென்பதை நான் ஒருபோதும் ஒப்புக்கொள்ளேன்.

## மனனமாலை.

"உண்டாலன்றி பசியடங்காது" அதுபோல் பகவானைப் பிரார்த்தித்தாலன்றி அவருடைய கருணையை அடையமுடியாது. உலகத்தில் வேலை செய்யாதவர்க்கு சோறிட மனம்வருமோ? அதுபோல் பக்திசெய்யும் உத்தமமான காரியத்தைச் செய்யாதவர்கட்கு பகவான் அநுக்கிரகம் புரியமாட்டார். ஈசுவரனைக் கருணாநிதி யென்று நாம் கூறினும், அவர் தமது கருணையை ஏற்கத்தக்கவர்களிடம் பாராட்டுவரே யன்றி, தம்மை ஸ்மரிக்காத பாபிகளிடம் பாராட்டார்.

பாலில் அதிகமான ஜலத்தைக் கொட்டினால், அதை சுவையுண்டாகும்படி காய்ச்ச வெகுநேரம் செல்லும் தண்ணீர் முழுவதும் வற்றினாலன்றி பாலில் பூர்த்தியான ருசியுண்டாகாது. இதைப் போல அநேக வருஷங்களாக உலக வியாபாரங்களிலேயே உழன்று திரிந்து மனதை நிலையற்ற சுகத்தில் பொருந்தச் செய்தவர்கள் கொஞ்சத்தில் அம்மனதைத் திருப்ப முடியாது. விரக்தியென்பது அவர்கள் இருக்குமிடத்தில் அரைக்ஷணமுமில்லா. ஆதலின் பொறுமையோடு நல்ல அப்பியாஸங்களைச் செய்து ஸத்குருவின் ஆக்ஞைபின்வண்ணம் நடந்து கொள்ளுதல்வேண்டும்.

சரீரத்தில் சொறி சிரங்குகளுண்டானால் அவற்றைப் புண்படுத்துதல் அறிவீனம். சிலர் சிரங்கு பழுத்து சீவடிந்து ஆறும் முன் தோலை யுரிப்பர். இதனால் நோய் அதிகரித்துப் புதிய சிரங்குகளுண்டாகி அவதியடைவர். இதுபோல், கிருகஸ்தாசிரமத்திலேயே யிருந்து ஈசுவரனைத் தியானித்து ஸத்கருமங்களைச் செய்தவரின் நாளடைவில் உலகப்பற்று ஒழியும். அப்போது ஸங்யாஸியாகலாம். சிலர் அப்படிச் செய்யாமல், குடும்பத்தாரோடு சண்டைபோட்டும், சோம்பலை மேற்கொண்டும், கோபத்தினாலும் துறவிகளாகின்றனர். இதனால் முன்னிலும் அதிகமான துன்பமே அநுபவிக்க நேருகிறது நல்ல மருந்தைப்போட்டுக் காயத்தை யாற்றுவதுபோல் ஸத்குருவைத்தேடி ஸம்சயங்களை நிவர்த்தி செய்து கொள்வது விவேகிகளின் இயல்பு

"பாலும் நீரும் போல்" என்ற பழமொழியுண்டு பாலும் நீரும் ஒன்றோடொன்று கலப்பது ஓராச்சரியமல்ல. பாலைக் காய்ச்சும்போது நீர் பிரிந்து போவதைக் கண்டு பாலானது மேலே எழும்புகிறது பின்னர் நாம் நீரைக் கொட்டியவுடன் அடங்கிவிடுகிறது. இது மேற்படி பால் தன் நேசனாகிய நீர் மறுபடியும் தன்னிடமே வந்துவிட்டானென்று அடங்கிப் போகிறதைக் குறிக்கிறதாம். இப்படியே உலகத்தில் ஸ்நேகிதர்கள் பரஸ்பர பிரீதி பாராட்ட வேண்டுமென்று மேற்குறித்த பழமொழியால் விளங்குகிறது.

வற்ற சம்பாஷணையில் சதாரம் நாடகத்தை ஆபாஸமற்ற விதமாய், கற்பு லக்ஷணப் பிரகாசமாய் நடத்திக் காட்ட வேண்டுமென்று பேசிக்கொண்டோம். அதற்கேற்ற யோக்கிய பாத்திரம் தாங்கள் தான். ஆகவே, எனது இந்த அபீஷ்டத்தை நிறைவேற்றிவைத்து எனது தாகத்தைத் தணிப்பிக்கவேண்டும். மோசக்காரனான அந்த தாமோதரம் ஐயங்கார் கண்டோன்மெண்டில் மறைந்துகொண்டிருப்பதாக அறிந்துகொண்டேன். தாங்கள் மாலை 6-மணிக்குள் பெண்வேடம் தரித்துக்கொண்டு, வேற்றுமனித ரூபமாய் மோட்டாரில் கண்டோன்மெண்டுக்கு வந்துவிட்டால், அமிர்தம் அண்டு கம்பேனியில் அந்த ஐயங்காரை நான் பிடித்துக் கொடுத்து விடுகிறேன். அவரோடு இரவு 8-மணிக்கு நாடகத்துக்குப் போகப் பொழுது சரியாக இருக்கும். தங்களை அங்கு நான் எதிர்பார்த்தபடி இருப்பேன். ஐயங்காரைப் பிடிப்பதற்கும் பெண்வேடமே தக்கது. வேண்டும் தங்கள் தயவு.

நட்பினனூழியன்,

**விஜயநாதன்.**

* * * *

## விஜயநாதன் கூப்பிடப் பட்டான்.

**ஸ்ரீநிவாஸஐயர்** :—"விஜயநாதரே! நீர் மேற்கண்ட கடிதத்தை ரங்கபாஷியத்துக்கு அனுப்பியதுண்டா?"


**விஜயநாதன்** :—"எனக்கு ஞாபகமில்லை."

**ஸ்ரீநிவாஸஐயர்** :—"கோர்ட்டாரவர்களை நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன். விஜயநாதன் ரங்கபாஷியத்துக்கு எழுதிய மேற்கண்ட கடிதத்தையும், ஜெகநாதன் சொற்படி விஜயநாதன் தாமோதரம் ஐயங்காருக்கு எழுதிய கடிதத்தையும் கோர்ட்டாரவர்கள் உற்றுப் பார்த்து இரு கடிதங்களிலும் கையெழுத்து ஒரே விதமாக இருக்கிறதா என்பதை ஆராய்ந்து அதைக் குறிப்பிட்டுக் கொள்ளவேண்டுகிறேன்."

தொண்டரடிப்பொடி :— "கடிதங்கள் இரண்டிலும் கையெழுத்து ஒன்ருகவே இருக்கின்றன வென்பது உண்மையே யானுலும், இந்த சாமான்ய சங்கதியைக் கொண்டு பிரத்தியக்ஷ மான ஒரு கொலையை ரங்கபாஷியம் நாயுடு செய்யவில்லை யென்று சாதித்து விடலாமா?"

ஸ்ரீநிவாஸஐயர் :— "மிஸ்டர் தொண்டரடிப்பொடியார் கொஞ்சம் பொறுக்கவேண்டும். ஜெகநாதன், விஜயநாதன்— இருவரும் ஒன்று சேர்ந்து, எப்படியாவது ரங்கபாஷியத்தைத் தமது மணியக்காரத் தெருவிலுள்ள வீட்டில் ஒரு தினத்துக் காவது நிறுத்தப் பிரயாஸைப் பட்டிருக்கிருர்கள். இதற்கு, தாமோதரம் ஐயங்காருக்கு அனுப்பிய கடிதமே போதிய ஸாக்ஷி. அக்கடிதப்படியே கடன் வாரண்டு பிறப்பிக்கப்பட, ரங்கபாஷியம் அதற்காகத் தலை மறைந்து நிற்றற்பொருட்டு, ஜெகநாத நாயுடு வின் வேண்டுகோளின்படி அவரது வீட்டில் மேல் மாடியில் தங்குகிருர். பிறகு நாடக நடிப்பில் விசேஷித்த பிரியமுள்ள ரங்கபாஷியத்தைப் பெண் வேடம் புனையுமாறு விஜயநாதன் கடிதம் அனுப்பிவிட்டு, தனது நாடகவேஷச் சாமான்கள் அடங் கிய பெட்டியை ஜெகநாதனிடம் கொடுக்கிருன். அப்பெட்டி யுடன் ஜெகநாதன் ரங்கபாஷியத்தினிடம் வந்து வேஷம் போட் டுக் கொள்ளச் செய்கிருன். விஜயநாதன் பெயர் பதிந்துள்ள அந்த நாடக வேஷப்பெட்டியும் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட் டிருக்கிறது. ரங்கபாஷியம் யதார்த்தமான உள்ளத்துடனும் பெண் வேடம் புனைந்து கொள்ள—அறைக்குள்ளே இருக்கிற இன்னெரு அறைக்குள்—போய் விடுகிருர். அவர் இருந்த அறையின் பிளான் — மாதிரியும் கவனிக்கத் தக்கது.

## பிரேமநாதனின் சவம் கிடந்த மேல்மாடியின் மாதிரி




ரங்கபாஷிய மிருந்த அறையைக் கொலை நடந்த பின், ஸஞ்சீவபாபு போலீஸ் இன்ஸ்பெக்டருடன் சென்று பார்வையிட்ட போது, தமது மனதிற்பட்ட அபிப்பிராயக் குறிப்பை என்னிடம் எழுதிக் கொடுத்திருக்கிறார். அதில் தாம் அந்த மேல்மாடியின் அமைப்பைப் பார்த்ததும், அறைக்குள் இருக்கும் சிற்றறையில் உட்கார்ந்துள்ள ஒருவனுக்கு வெளியில், கூடத்தில், என்ன நடந்தாலும் தெரியாதென்றும், ஆகவே ரங்கபாஷியம் நாயுடு சிற்றறையி லிருந்தபடியே பெண்வேடம் தரித்துக்கொண்டிருக்கிற சமயம்—அந்த வேலையில் அவர் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி நிலைக்கண்ணாடியின் முன்பு நின்றவாறாக—அதில் தம் உருவத்தை நோக்கியபடியே யிருக்குங்காலையில்—யாரோ பிரேமநாதனைக் கொன்று எடுத்து வந்து அக்கூடத்தில் சவமாகக் கிடத்தியிருக்கவேண்டு மென்றும் ஸஞ்சீவபாபு அபிப்பிராயப்படுகிறார். அதற்குத் தக்கபடி ரங்கபாஷியம் நாயுடு ஸ்திரீவேடம் தரித்ததும்—அவராக இல்லாமல், யாரோ தூண்டி, அதன்பேரிலேயே அவர் பெண்வேடம் தரிக்க ஏற்பட்டிருக்க வேண்டுமென்றும், அவரை அவ்வறையில் வேடம் பூணுமாறு நயவஞ்சகமாக விட்டுவிட்டு, வெளிக் கூடத்தில் சவத்தைக் கொண்டுவந்து போடுவதான சங்கதி நடந்திருக்க வேண்டுமென்றும், அவ்விதமாய்ப் பிரேமநாதனை அடித்துக் கொல்ல ஜெகநாத நாயுடுவின் வீட்டை

யொட்டியுள்ள தோட்டம் தக்க உதவியாயிருந்திருக்கக் கூடுமென் றும், வெளியில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் தோட்டத்தில் ரகசியமாகக் கொன்று, தோட்டத்திலிருந்து மேல்மாடிக்குச் செல்லும் வழியாக பிரேமநாதனின் சவத்தை எடுத்துவந்து மேல் மாடியின் வெளிக்கூடத்தில் கிடத்துதல் மிகச் சுலபமேயென்றும் ஸஞ்சீவபாபு தமது அபிப்பிராயக் குறிப்பில் எழுதியிருக்கிறார். இந்த அபிப்பிராயத்தை யொட்டியே விஷயங்களும் முன்னேற் பாட்டுடன் நடை பெற்றிருக்க வேண்டும். வெளிக்கூடத்தில் சவம் கிடப்பதை—ரங்கபாஷியம் நாயுடு தாம் சிற்றறையில் பெண் வேடச் சிந்தனையில் இருப்பதால்—எதுமே அறிய முடியாதவராகி விடுகின்றார். எற்கெனவே முடிவு செய்திருக்கிறபடி மோட்டார் வண்டியையும் வெளியில் கொண்டுவந்து நிறுத்தி விடுகிறார்கள். சிற்றறைக்குள்ளிருக்கும் மேஜையின்மீது சென்னைக்குச் செல்ல முதலாவது வகுப்பு டிக்கட் ஒன்றையும் ஜெகநாதநாயுடு வைத்து விடுகிறார். அந்த டிக்கட் வாங்கி வந்தது இன்னுரென்பதையும் ஸஞ்சீவபாபு அறிந்துகொள்ளாமலில்லை. கேஸ் வெகு நேர்த்தியாக ஜோடிக்கப்பட்டுப் போய்விடுகின்றது"—என்று கூறி ஸஞ்சீவபாபு வின் குறிப்புக் கடிதத்தையும் ஒரு ரிக்கார்டாக (ஆதாரவாக)ப் பதிந்து கொள்ளும்படி கோர்ட்டாரின் வசம் கொடுத்தார்.

தோண்டரடிப் போடி :—"மிஸ்டர் ஸ்ரீநிவாஸ ஐயருடைய புத்தி சாதுர்யத்தால் இக்கேஸ் உச்சியை எட்டிவிட்டது! உத்தேச மாக எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். மோட்டார் கூடத் தெருவில் தயாராகக் கொண்டுவந்து நிறுத்தப்பட்டிருக்க, இவ்வளவு உண்மையான கேஸை இவர் பொய்யாக்கிவிடப் பார்க் கிறார். "கேஸில் வலுவில்லாமற் போனல் வக்கீல் ஆத்திரங் காட்டிப் பேசுவார்" என்ற பழமொழிக்கு மிஸ்டர் ஸ்ரீநிவாச ஐயரை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்."

ஸ்ரீநிவாஸய்யர்.—"அங்கே கொண்டுவந்து நிறுத்தப்பட்ட மோட்டார் ரங்கபாஷியம் நாயுடுவி னுடையதல்ல வென்பதை இதோ நிரூபித்துவிடுகிறேன். அந்த மோட்டாரின் நெம்பர்

670. போலீஸ் குறிப்பிலும் இந்த நெம்பர் தான் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றது. ரங்கபாஷியம் நாயுடுவினுடைய மோட்டார் நெம்பர் 423. இது விஷயமாக ரங்கபாஷியம் நாயுடுவுக்கு பிரேம நாதன் கொலையுண்ட தினம் காபி கொண்டுவந்து தர வந்த அப்பாய் என்பவனை இங்கு சாக்ஷியாக விசாரிக்கப்பட வேண்டும்."

அப்பாய் சாக்ஷியாகக் கூப்பிடப்பட்டான்.

அப்பாய்.—"எப்பிரல் மாதம் 18—ம் தேதி மாலை நான்கு மணிக்கு எஜமானர் ரங்கபாஷியம் நாயுடு, தாம் மணியக்காரத் தெருவிலிருந்துகொண்டு என்னை வரும்படி ஆள் அனுப்பினர். அவ்விதமே சென்று அவரை மாடியின்மேல் கண்டு கொண்டேன்.

தொண்டரடிப் பொடி :—"அப்போது வெளிக்கூடத்தில் ஏதாவது கிடந்ததா? அந்தக்கூடத்தை நன்ருகப் பார்த்துக் கொண்டு சென்ருயா?"

அப்பாய் :—"வெளிக்கூடத்தைத் தாண்டி, எதிரிலுள்ள அறையிற் பிரவேசித்து, அப்பால் தான் அந்த அறையினுள் ஒரு மூலையிலுள்ள சிற்றறைக்குள் நான் போகவேண்டும். நான் அவ்விதம் சென்றபோது எதையும் என் கண் முன்பு காணவில்லை. கண்டிருந்தால் உடனே எஜமானருக்குத் தெரிவித்திருப்பேன்."

தொண்டரடிப் பொடி :—"எஜமானர் என்று சொல்லாதே. ரங்கபாஷியம் நாயுடு என்று தெளிவாகச் சொல்."

அப்பாய் :—"அப்படியே கூறுகிறேன். எஜமானர் ரங்கபாஷியம் நாயுடு தமக்கு ஐந்தரை மணிக்குக் காபி கொண்டுவந்து தரும்படியும், 6½ மணிக்குத் தமது மோட்டாரைக் கொண்டுவந்து நிறுத்தும்படியும் உத்திரவிட்டார். அப்படியே செய்வதாகக் கூறி சுண்ணும்புக்காரத் தெருவுக்குச் சென்று மோட்டார் டிரைவரிடம் விஷயத்தைத் தெரிவித்துவிட்டு, மணியக்காரத் தெருவுக்கு வந்தேன். ஜெகநாதநாயுடுவைக் காபி வைப்பதற்கு கியாஸ் அடுப்பைக் கேட்டேன். அவர் உள் அறையில் ஸகலமும் இருப்பதாகக் கூறி, எனக்கு வெகு நேர்த்தியான வேலைப்பாடுள்ள சுருட்டு ஒன்றைக் குடிப்பதற்குக் கொடுத்து, வீட்டின் உள்ளறைக்கு அனுப்

பினர். நான் உட்சென்று அங்குள்ள டெலிபோன் மூலமாக மாடியி லிருக்கும் எஜமானர் ரங்கபாஷியம் நாயுடுவுக்கு, நான் சுண்ணும்பு காரத்தெருவுக்குப் போய் வந்த விவரங்களைத் தெரிவித்துவிட்டு காப்பி வைப்பதற்காகப் பிரயத்தனப்பட்டேன். காப்பித்தூள் இல்லை. அதற்குப் பதிலாகக் காப்பிக்கொட்டைகள் இருந்ததால், அதை வறுத்துப் பொடி செய்யவேண்டியிருந்தது. இது என்ன வேலையெனக்கிட்ட வேலை யென்று மனதிற்குள் சிடுசிடுத்துக் கொண்டேன். அதற்குள் ஜெகநாதநாயுடு என்னருகே வந்து முதலில் கொஞ்சம் சுருட்டு பிடித்துவிட்டுப் பிறகு காப்பிக்கொட் டையைப் பொடி செய்யலாமென்ருர். சலித்துப் போன உள்ளத் துக்கு சுருட்டு ஒரு உற்சாகத்தைக் கொடுக்கும் உல்லாஸ வஸ்து என்று என்னைத் தட்டிக்கொடுத்து சிலாக்கியப்படுத்தினர். அவர் பேச்சின் பாராக்கிலே என் கடமையை மறந்து சுருட்டைக் குடிக் கத் தொடங்கினேன். அச்சுருட்டில் ஏதோ பிசகு இருக்கவேண்டு மென்று எண்ணிக்கொண்டு, அப்போது உண்டான மயக்கத்தால் உடனே கீழே படுத்துக்கொண்டேன். வெகு நேரத்திற்குப் பிறகு "ஆயிற்ற? உடனே வரட்டும் மோட்டார்; கொண்டு வா சீக்கிரம் ஓ நடம்ளர் காபி" என்று டெலிபோன் சப்தம் கேட்டது. உடனே நான் திடுக்கிட்டெழுந்து—"அப்படியே"—என்று அதற்குப் பதி லாக டெலிபோன் மூலமாய்த் தெரிவித்துவிட்டு, அவசர அவசர மாய்க் காபி வைப்பதற்குப் பிரயத்தனப் படலானேன். காபி வைத்து எடுத்துக்கொண்டு மேல்மாடிக்குச் செல்வதன் பொருட்டாக வெளியே வருகையில், போலீஸாரின் கூட்டமும், ஜனத்திரளும் பலமாக இருந்தது. எனது வாக்குமூலத்தை,—அதுவும் இதே விதமாகத்தான் இருக்கும்,—அதை இன்ஸ்பெக் டரிடம் கொடுத்தேன். தெருவில் 670-ஆம் நெம்பருள்ள யாரு டைய மோட்டாரோ நின்று கொண்டிருந்தது. இவ்வளவு தான் எனக்கு இந்தக் கேஸில் தெரியும்."

**ஸ்ரீநிவாஸஐயர்** :—வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் ரங்கபாஷியம் நாயுடுவி னுடைய தல்ல வென்று

மெய்ப்பித்து விட்டேன். மிஸ்டர் தொண்டரடிப்பொடியார்—ரங்கபாஷியம் நாயுடு ஸ்திரீ வேடம் புனைந்ததே கொலைக்குப் பெரிய அத்தாட்சி யென்று, இன்றைய விசாரணையின் ஆரம்பத்தில் கூறினர். ரங்கபாஷியம் தானாகவே பெண் வேடம் தரிக்கவில்லை யென்றும், அவரை அங்ஙனம் செய்யத் தூண்டியது விஜயநாதனும் ஜெகநாதனுமேயாமென்றும், இவ்வாறு பிறரின் தூண்டுதலாலேயே—வித்தியாஸ எண்ணமின்றியே—அவ்வேடம் புனையத் தயாராயினரென்றும், ஆகவே அந்தப் "பெண் வேடம் கொலைக்கு ஆஸ்பதமாகுமா"—என்ற கேள்விக்கு—ஒருபோதும் ஆகாதென்றும் கூறி ருசுப்பித்து விட்டேன்." எனப் புகன்று தமது நாற்காலியில் உட்கார்ந்தார். கோர்ட்டும் கலைந்தது.

# அத்தியாயம்—14

## செஷன்ஸ் விசாரணை

ரங்கபாஷியம் நாயுடுவின் விசாரணை தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது. விஜயநாதனும் ஸ்ரீநிவாஸப் பிள்ளையும் பின் வருமாறு பேசிக்கொண்டனர்.

**ஸ்ரீநிவாஸப்பிள்ளை.**—"அன்றைய தினம் ஸஞ்சீவ பாபுவைக் கொல்வதற்காக நாம் அவனைப் பள்ளத்தூருக்கு இட்டு வந்திருக்க நம்மை அவன் சாராய வெறியில் மயக்கி, நமது முழு ரகசியங்களையும் அறிந்துகொண்டு போலீஸாருக்கு எட்டவிட்டுவிட்டான். அதுமுதற்கொண்டு நம்மீது போலீஸார் கண் வைத்திருக்கின்றனர். பிரேமநாதனின் கொலையின்போது நீ ஊரிலேயே இல்லையென்றும் சென்னையில் இருந்ததாகவுமல்லவோ கேஸை நாம் கொண்டுபோக வேண்டுமென்று எண்ணியிருந்தோம்!"

**விஜயநாதன்.**— "அனைத்தும் இந்த ஸஞ்சீவபாபுவினால் பாழ்பட்டுவிட்டது. அவன் எனக்கும் ஜெகநாதனுக்கும் நண்பன்

போலிருந்து ரகசியத்தில் எங்கள் இருப்பிடங்களைச் சோதித்து தன் கேஸுக்கு வேண்டிய ஆதாவுகளையெல்லாம் தேடிக்கொண்டு விட்டான். அநுகூல சத்துருவானுன். பிரேமநாதன் இறந்த சமயம் நான் திருச்சியில் இருந்ததாய் நன்ருக ருசுப்பிக்கப்பட்டுப் போயிற்று.''

**ஸ்ரீநிவாசன்.**—'' இந்தக் கேஸில் ஒரு சாக்ஷியாக லண்டனிலிருக்கும் கிருஷ்ணமூர்த்திப் பிரபு என்ற ஒருவர் விசாரிக்கப்படப் போகிருராம். அவர்களோடு ஸஞ்சீவபாபு லண்டனிலிருந்தும் புறப்பட்டுவிட்டதாக அரசப்பனுக்கு ஒரு தந்தியும் வந்திருப்பதை நான் பார்த்தேன். ஸஞ்சீவபாபு இந்தக் கேஸை வெகு தூரத்திற்கு எட்டவைத் திருக்கிருன்.''

இவர்கள் பேச்சின் இடையே ஒருவன் ஸ்ரீநிவாஸப்பிள்ளையிடம் ஒரு காகிதத்தை நீட்டினுன். அது ஸ்ரீநிவாஸப்பிள்ளையைப் பிடிப்பதற்கான வாரண்டாக இருந்தது. ஸ்ரீநிவாஸன் மவுனமானுன். போலீஸ் வசமானுன். விஜயநாதன் கலக்கமேலிட்டவனுய்த் தனியே நின்ருன். கடந்துபோன இனிமையான பொழுதுபோக்குகளை நினைத்துக்கொண்டு மனது கசந்தான். இத்தருணத்தில் ஜெகநாதநாயுடுவின் குமாரனுன விஜயராகவன் கோர்ட்டாரால் கூப்பிடப்பட்டான்.

**விஜயராகவன் :**—'' பிரேமநாத மாமா இறந்து போனவன்று சாயந்திரம் என் தகப்பனுர் ஒருகடிதத்தை டவுன்போலீஸ் ஸ்டேஷனில் தந்துவிட்டு ஓடி வந்துவிடும்படி சொன்னுர். பிரேமநாத மாமாவே அதைக் கொடுத்தனுப்பியதாகப் போலீஸில் சொல்லு என்ருர். அப்படியே தந்துவிட்டு ஓடி வந்துவிட்டேன். உடனே என்னை ஒரு அறையில் போட்டுக் கதவை மூடிவிட்டார். அந்த அறையிலேயே என் தம்பி சுந்தரமும் இருக்கக் கண்டேன். அன்று பகலில் என் தகப்பனுர் சொற்படி பிரேமநாதமாமாவை அழைத்து வரப்போனேன். அப்போது அவர் இராஜம் அத்தையோடு பேசிக் கொண்டிருந்தார். நான் என் தகப்பனுர் அழைப்பதாகச் சொல்ல என்னுடன் வந்தார். நடுவழியில் சுந்தரம் எதிர்ப்பட்டு சீக்கிரம்

அழைத்து வரச்சொன்னதாகத் தெரிவித்தான். மூவருமாக வீட்டிற்கு அருகிலுள்ள தோட்டத்துக்குப் போனோம். அங்கு தான் பிரேமநாத மாமாவை அழைத்துவரும்படி என் தகப்பனார் சொல்லியிருந்தார். நாங்கள் தோட்டத்துக்குள் போனதும், விஜயநாதன் எங்கள் இருவரையும்வெளியில் போகும்படி அனுப்பி விட்டார். பிறகு நடந்தது ஒன்றும் எனக்குத் தெரியாது. இப்படி மாமாவை அழைத்துவந்தால் எனக்கு— தானாக ஓடுகிற ரயில் வண்டி—வாங்கித் தருவதாக என் தகப்பனார் சொன்னார். அந்தப் படி எனகிக்கு வாங்க் கொடுக்கவில்லை.''

ஜகநாதநாயுடுவின் குமாரன் சுந்தரம் சாக்ஷியாகக் கூப்பி டப்பட்டான்.

சுந்தரம் :—"நாங்கள் இருவரும் வீட்டுக்குள் போனதும் என் அண்ணாவை என் தகப்பனார் எங்கோ அழைத்துக்கொண்டு போனார். என்னை ஸ்ரீநிவாஸப்பிள்ளை ஒரு அறையில் போட்டு மூடிவிட்டார். அதற்குப் பிறகு என் அண்ணாவையும் அந்த அறை யில் தானே போட்டு மூடிவிட்டார்கள். வெகு நாளைக்குப் பிறகு போலீஸார் வந்து எங்களை அழைத்துப்போய், பிறகு என் அம்மா விடம் எங்களை அனுப்பினார்கள்'';

ஸ்ரீநிவாச ஐயர் :—"பிரேமநாதனை இவ்வாறாகத் தந்திர மாய்த் தோட்டத்திற்குள் இழுத்துவந்து அங்கே அவனைக்கொன்று சவத்தைத் தயார் செய்து விடுகிறார்கள். முன்னேற்பாட்டின் படி ரங்கபாஷ்யம் சிற்றறைக்குள் பெண் வேடம் தரிப்பதில் கவனமா யிருக்கிறார். மாடிமீது அப்பாய் என்ற வேலைக்கா ரன் வராதபடி அவன் மயக்கச் சுருட்டைக் குடிக்கச் செய்து மயங்கி உறங்கும்படி செய்து விடுகின்றனர். இதனிடையே தோட்டத்தி லிருந்து மாடிக்குச் செல்லும் வழியாகப் பிரேம நாதனின் சவத்தைத் தூக்கிவந்து மேல்மாடியின் வெளிக் கூடத் தில் கிடத்திவிட்டு, இதற்கு முன்னதாகவே பிரேமநாதன் தந் தது போன்று ஒரு கடிதத்தை விஜயராகவனிடம் தந்து டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி விடுகிறார்கள். அக்கடிதத்தால்

போலீஸாரும் வந்துவிடுகிறார்கள். மோட்டாரையும் வாயிற்படியில் கொண்டுவந்து நிறுத்திவிட, கொலைக்காட்சி சரியாக ஜோடிக்கப் பட்டுப் போய்விடுகிறது. பார்த்தீர்களா—கேஸின் போக்கை?''

தொண்டரடிப்பொடி :—''பிரேமநாதன் தோட்டத்துக்குள் போனதாக விஜயராகவன் சாக்ஷியம் கூறினானே தவிர, அங்கே அவன் அடித்துக் கொல்லப்பட்டதாகச் சொல்லப்படவில்லையே?''

ஸ்ரீநிவாச ஐயர் உடனே, மாரிமுத்து அறந்தாங்கி போலீஸ் ஸ்டேஷனில் தந்த வாக்குமூலத்தைக் கோர்ட்டில் ஆஜர்படுத்தி அந்த வாக்குமூலத்தால், இரண்டு சிறுவர்களுடன் வந்த ஒருவரை ஜெகநாதநாயுடுவின் தோட்டத்தில் கட்டைகளால் அடித்துக் கொன்றதாக ஏற்படுகிறதென்று விளக்கி, அந்த சிறுவர்கள் யாவரென்று மாரிமுத்துவைக் கேட்பதற்காக அவனை ஸாக்ஷியாகக் கூப்பிடும்படி கேட்டுக்கொள்ள, அவ்விதமே அவன் கூப்பிடப் பட்டான்.

மாரிமுத்து:—''நான் அன்று பார்த்த சிறுவர்கள் இந்த விஜயராகவனும் சுந்தரமுமே. இவர்களை எனக்கு செவ்வையாகத் தெரியும். இவர்களோடு வந்த ஒருவரைத்தான் அடித்துக் கொல்லப் பட்டது. இதுமட்டு மல்ல; எப்பிரல் மாதம் 16-ம் தேதி யன்று எங்களைப் பள்ளத்தூரிலிருந்தும் கொண்டுவந்து சமயபுரத்துக்கு அருகே நிறுத்தி வைத்திருந்தார்கள். ஒரு மோட்டாரில் ஜெகநாத நாயுடுவும் வேறு இருவரும் அன்று மாலையில் வருவார்களென்றும், அவர்கள் மூவரையும் கட்டி உருட்டிவிட்டு வண்டியிலிருப்பதைக் கொள்ளையிட வேண்டுமென்றும், எங்களுக்கு சீனிவாசப்பிள்ளையும் விஜயநாதனும் உத்தரவு செய்திருந்தனர். அதை மறுத்தால் உடனே ஒரு வெட்டு இரண்டு துண்டாக எங்கள் உடல் நிலத்தில் விழுந்துவிடும் என்பது நிச்சயம். அன்று மாலை இருட்டிய பின்பு மோட்டார் வந்தது. உடனே அதை எதிர்த்து நிறுத்தி ஜெகநாத நாயுடுவைக் கயிற்றால் கட்ட, அவர் அதற்குத் தடை சொல்லாதிருந்தார். அவருடன் ஒரு பெரிய மனிதரும் ஒரு வேலைக்கார

னும் இருந்தார்கள். அவ்விருவரும் எங்களை எதிர்த்தனர். நாங்கள் அப்பெரிய மனிதரைக் கயிற்றால் கட்டினோம். உடனே அவரது வேலைக்காரன் தன் பிஸ்தோலைத் தனது சட்டைப்பையிலிருந்தும் எடுத்து எங்களைச் சுட முயன்றான். அனைவரும் அவன் மீது விழுந்து அந்தப் பிஸ்தோலைப் பிடுங்கிக்கொள்ளவே அவன் விரைந்து ஓடினான். கடைசியில் அவனை விஜயநாதன் தனது கைத்தடியால் அடித்துக் கொன்றுவிட்டார். அவன் இறந்து சவமான பிறகும் மற்றவர்கள் அவனைப் பின்னும் கட்டைகளால் அடித்தனர். இதன் மத்தியில் அந்தப் பெரியமனிதரும் ஜெகநாத நாயுடுவும் எங்கேயோ மறைந்தனர். அவர்களைப் பற்றி நான் ஒன்றும் அறியேன். ஆனால் ஒரு விஷயம். அந்தப் பெரியமனிதர் தான்—விஜயராகவன், சுந்தரம் இவர்களோடு ஜெகநாதநாயுடுவின் தோட்டத்துக்கு வந்தவர். அங்கு அடித்துக் கொல்லப்பட்டவரும் அவரே. நான் நன்றாய் அடையாளம் தெரிந்து சொல்லமுடியும்.''

**ஸ்ரீநிவாச ஐயர்** :—"இந்த ஸாக்ஷியத்தினால் பிரேமநாதனை விஜயநாதன் ஜெகநாதநாயுடு இருவருமாகப் பிறரைக்கொண்டு கொன்று மாடிமேல் கிடத்தினார்களென்ற விஷயம் வெளியாகலாம். சமயபுரத்தில் எதிர்க்கப்பட்டவரும், ஜெகநாதநாயுடுவின் தோட்டத்தில் அடியுண்டு கொல்லப்பட்டவரும் ஒருவரேயென்று மாரிமுத்து குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. இன்னும் அடுத்த ஸாக்ஷியமாகக் கன்னையா நாயுடுவை விசாரித்தால் பின்னும் அதிகமான விவரங்கள் தெரியவரும்.

### கன்னையா நாயுடு கூப்பிடப்பட்டார்.

**ஸ்ரீனிவாச ஐயர்** :—"எப்பிரல் மாதம் 18-ம் தேதியன்று நீர் விஜயநாதனைச் சந்தித்ததுண்டா?''

**கன்னையா நாயுடு**:—"எனக்குத்திரிச்சிஜெங்கிஷனில் டிக்கட் கொடுக்கும் வேலை. எனக்கு இலவசத்தில் நாடகம் பார்க்க விஜயநாதர் ஒரு சோபா டிக்கட்டை என்னிடம் கொடுத்துவிட்டு, அன்றிரவு மெயிலுக்கு சென்னை போவதற்கான முதல் வகுப்பின் டிக்

கட்டைத் தரும்படி கேட்டார். நான் அவர் விரும்பியபடி பணம் பெற்றுக்கொண்டு முதல்வகுப்பு மெயில் டிக்கட் ஒன்றை அவருக்குக் கொடுத்தனுப்பினேன். அப்போது பகல் மணி 10 இருக்கும்.''

ஸ்ரீனிவாச ஐயர் :—"இவ்விதமாக முதல் வகுப்பு டிக்கட்டை வாங்கி வந்து ஜெகநாத நாயுடு இடம் விஜயநாதன் தந்தனுப்ப, அதை ஜெகநாத நாயுடு சிற்றறைக்குள் இருக்கும் ரங்கபாஷியத்தின் அருகே வெகு தந்திரமாக வைத்து விடுகிறார். கொலைக்கு அதுவும் ஒரு அத்தாக்ஷியாகி விடுகிறது:''

தொண்டரடிப்பொடி :—"மிஸ்டர் ஸ்ரீனிவாச ஐயர் தாம் கேஸையே மாற்றி விட்டதாக நினைத்துக் கொள்கிறார். ஒரு போது மில்லை. பிரேமநாதனே அன்னியன். அநேக ஆண்டுகட்குப் பின்னர் வீடுவந்து சேர்ந்தவன். ஜெகநாத நாயுடும் அன்னியர். விஜயநாதனும் அப்படியே; இருவருக்கும் புதிதாகத் தான் சந்திப்பு. அப்படி யிருக்க, ஜெகநாத—விஜயநாதர்களுக்கு அனுவசியமாகப் பிரேமநாதனின் மேல் துவேசம் எப்படியுண்டாகும்? எல்லாம் கட்டுக் கதையாக இருக்கிறது. இந்த விஷயத்தைச் சற்றேனும் எண்ணிப் பாராமல் ரங்கபாஷியத்தின் கொலைக் கேஸையே தாம் வேறுபடுத்தி விட்டதாக மிஸ்டர் ஸ்ரீநிவாஸ ஐயர் மன மகிழ்ந்து கொள்கிறார்.''

தொண்டரடிப்பொடி ஐயங்காரின் கேள்விக்கு ஸ்ரீனிவாஸ ஐயர் தக்கபடி உத்தரம் விளம்பினார். ஜெகநாத நாயுடுவுக்கும் பிரேமநாதனுக்கும் மனஸ்தாபம் ஏற்படவேண்டியதற்கு—பிரேமநாதன் நிலங்கள் வாங்கும் பொருட்டு அனுப்பிய பணத்தை ஜெகநாத நாயுடு பிரேமநாதனின் நண்பன் போலத் தன்னைக் காண்பித்துக்கொண்டு அந்தப் பணத்தை யெல்லாம் மோசமாக அபகரித்துக்கொண்ட விதத்தையும், ஜெகநாத நாயுடு வாங்கிய நிலங்களைப் பார்ப்பதன் பொருட்டாக பிரேமநாதன் லண்டனிலிருந்து வந்ததும், அவனுக்குப் பதில் சொல்ல வழியின்றி, தனது மோசம் வெளி வராதபடி அவனைத் தோட்டத்தில் மற்றவர்களைக் கொண்டு அடித்துக் கொலை செய்து, அப்பழியை ரங்கபாஷியத்

தின்மேல் போட்டு, அந்த வகையில் ரங்கபாஷ்யத்தையும் தூக்குத் தண்டனைக்கு உட்படும்படி செய்துவிட்டு, பிறகு தனது மனைவியான கனகவல்லியின் பிதிரார்ஜித சொத்துக்களை, அப்போது ரங்கபாஷியம் இருந்து தடை செய்ய எதுவில்லாமல், குடும்பத் தலைமையற்றுக் கேட்போர் யாருமே இல்லாமற் போய் விடுவதால், ரங்கபாஷியமும் மரண தண்டனைக்கு உட்பட்டுப் போய் விடுவதால், தன்னை எதிர்க்கவோ, தடை செய்து ஆக்ஷேபிக்கவோ ஒருவருமின்றி தன் இஷ்டப்படி அச்சொத்துக்களை விற்று ஸ்வாராஜ்யமாக ஆரவாரம் செய்யலாமென்று கருதியதையும், அதற்கேற்ப அவர் நடந்து, அதன்மேல் கனகவல்லி அவர் மீது வியாஜ்ஜியம்செய்து கோர்ட்டில் தீர்ப்பான விஷயங்களையும் கோர்ட்டாருக்கு வெகு விரிவாக எடுத்துரைத்தார். ஸ்வாமி பெட்டிக்குள் இருந்து ஸஞ்சீவ பாபுவினல் கண்டெடுக்கப்பட்ட பிரேமநாதன் எழுதிய கடிதங்களையும், அதற்கு ஜெகநாத நாயுடு தந்த பதில் கடிதங்களின் பிரதிகளையும் கோர்ட்டில் தாக்கல் செய்தார்.

பிறகு அடுத்த ஸாக்ஷியாக ஸ்ரீநிவாஸப்பிள்ளை விசாரிக்கப்பட, அவர் தன் மீது சுமத்தப்பட்ட எந்தக் குற்றத்தையும் ஒப்புக் கொள்ளவே யில்லை. ஸ்ரீநிவாஸ ஐயர் அவர்மீது சுமத்தப்படுவது இவ்வொரு கேஸைப்பற்றி மட்டுமல்லவென்றும், அவர் மீது பல கொள்ளைக் கேஸ்கள் இருக்கின்றனவென்றும், அவர் தனியாக விசாரிக்கப்படவேண்டுமென்றும் தெரிவித்துக் கொண்டார்.

அதன் பின்னர், அன்று காலையிலேயே ஸஞ்சீவபாபு சென்னையிலிருந்து வந்திருக்க வேண்டுமென்றும், வாராததின் காரணம் தெரியவில்லை யென்றும், இக்கேஸில் முக்கியமாகத் துப்பறிந்துள்ள ஸஞ்சீவபாபுவையும், லண்டனில் பிரேமநாதனுடன் இருந்த கிருஷ்ணமூர்த்திப் பிரபுவையும் விசாரிக்காமல் கேஸை முடிவுசெய்துவிடக் கூடாதென்றும் கேட்டுக்கொண்டார்.

கேஸ் மறுதினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றும் ஸஞ்சீவபாபு வரவில்லை. அதற்கு அடுத்த தினமும் எதிர்பார்க்கப்

பட அன்றும் ஸஞ்சீவபாபு வரவேயில்லை. கோர்ட்டார் ஸ்ரீநிவாஸ ஐயரைச் சினக்குறிப்புடன் வினவினர்.

**ஸ்ரீநிவாஸ ஐயர்:**—"இன்று கிடைத்த பத்திரிகைகளால் சென்னையிலிருந்து புறப்பட்ட மெயில்வண்டியும், எக்ஸ்பிரஸ் வண்டியும் புயற்காற்றால் கீழேவிழுந்து அலங்கோலப்பட்டு விட்டனவென்று தெரிவதால், அந்த வண்டியில் ஸஞ்சீவபாபுவும் கிருஷ்ணமூர்த்தியும் பிரயாணப்பட்டிருக்கலாமென்றும், அதனால் வந்துசேரத் தடைபடுவதா யிருக்கவேண்டுமென்றும் எனக்குத் தோன்றுகிறது" என்றார்.

அன்றைய "செஷன்ஸ் விசாரணை" அவ்வளவுடன் நின்றது.

# அத்தியாயம்—15

## கஷ்டத்திற்குத் தக்க சுகம்

திடுக்கிடத் தகுந்த விபத்துகள் தென்னிந்தியா ரயில்வேயில் நேரிட்டுப் போயின. 1916—ம் வருஷம் நவம்பர் மாதம் 22-ம் தேதியன்று காலை சென்னை எங்குமே இருண்டுவிட்டது. விடாமழை கொட்டிக் கொண்டே யிருந்தது. அதற்கு முந்தின இரவு 2½-மணி முதற் கொண்டே பலத்த காற்றும் மின்னலுமாய் வானம் வெகு கருமையுடனும் தோன்றிற்று. சென்னைத் துறைமுக ஆபீஸருக்கு, புயல் காற்றானது சென்னைக் கரையை நோக்கிப் பாதி வழி வந்துகொண்டிருக்கிறதென்றும், கீழ்நோக்கி வீச ஆரம்பித்திருக்கிறதென்றும் சமாசாரம் கிடைத்தது.

சிறுகச் சிறுகப் புயல் காற்றின் வேகம் சென்னை முற்றிலும் பரவியது. பகல் பத்தரை மணிக்கு சென்னைத் துறைமுகத்தில் பிரசண்ட மாருதம் கடலில் வீசும் குறி காட்டப்பட்டது. இரவா

னதும் அக்காற்று பலமாகிப் பெரும் புயலாக மாறிவிட்டது. அன்றையதினம் இரவு வழக்கம்போல் சென்னையிலிருந்தும் தூத்துக்குடிப் பக்கத்திற்கு முதலில் 'போர்ட் மெயில்' வண்டியும், பிறகு 'எக்ஸ்பிரஸ்' வண்டியும் எழும்பூர் ஸ்டேஷனிலிருந்தும் விடப்பட்டன.

போர்ட் மெயில் வண்டியில்தான் ஸஞ்சீவபாபுவும், கிருஷ்ணமூர்த்திப்பிரபுவும், அவர் தகப்பனரும், லக்ஷ்மீகாந்தமும், விஜயநாதனின் மனைவியும் பிரயாணமாய் வந்துகொண்டிருந்தனர். செங்கற்பட்டு ஸ்டேஷனிலேயே அந்த சமயம் அடித்த காற்றால் 'போர்ட் மெயில்' வண்டி பெரிதும் தத்தளித்தது. அங்கிருந்து ஸமாளித்துக்கொண்டு இரவு 11½ மணிக்கு மைலம் என்ற ஸ்டேஷனுக்கு வந்து மூன்று முறை விசில் கொடுத்தது. ஸ்டேஷனில் நேர்ந்த அசந்தர்ப்பத்தால் கைகாட்டி மரம் கீழே இறக்கப்படாததால், அதைக் கடந்து உட்செல்ல ரயில்வேயின் விதி இடம் தாராமையின், கைகாட்டி மரத்திற்கு இப்பால் வெளியிலேயே நின்றுகொண்டிருந்தது. அதன்'பின் ஒரு மணி நேரம் கழித்து, இரவு பன்னிரண்டரை மணிக்குப் புயல்காற்றின் வேகத்தால் எல்லா வண்டிகளும் குப்புறக் கவிழ்ந்துவிட்டன. காலை 5-மணிவரையில் ஜனங்கள் தவித்த தவிப்பு இவ்வளவு அவ்வளவன்று. ஸஞ்சீவபாபு முதலியவர்கள் வேறு பலருடனும் தங்கள் சாமான்களோடு "விக்கிரவாண்டி" ஸ்டேஷனுக்கு ஓடிவந்தனர். அங்கும் வண்டி புறப்பட இயலாதென அறிந்து, விழுப்புறம் ஸ்டேஷனுக்கு விரைந்து சென்றனர். அங்கும் வண்டிகள் விடப்படவில்லை.

மெயில் வண்டிக்குப் பிறகு புறப்பட்ட "எக்ஸ்பிரஸ்" வண்டியும் "பாக்கம்" என்ற ஸ்டேஷனில் புயல்காற்றால் மோதப்பட்டு விழுந்து விட்டது. தந்திக்கம்பிகள் நெடுக விழுந்தும், அறுந்தும்போயின. தமக்கு நேர்ந்த விபத்தைப்பற்றி ஸஞ்சீவ பாபு அரசப்பனுக்குத் தந்திகொடுக்க எண்ணினர். தந்திக் கம்பிகள் நெடுக அறுந்து போய்விட்டபடியால் தந்தி யடிப்பதற்கும் கூடவில்லை, கடைசியாக வந்ததெல்லாம் வரட்டுமென்று மௌள

னமாய் இருந்துவிட்டார். இதனால் தான் குறித்தகாலத்தில் ஸஞ்சீவ பாபு கோர்ட்டில் ஆஜராகக்கூடவில்லை.

திரிச்சினப்பள்ளியில் செஷன்ஸ் கோர்ட் வழக்கம்போல் கூடிற்று. அன்றைய தினமும் ஸஞ்சீவ பாபு வரவில்லை. கேஸைக் கோர்ட்டார் மற்றொரு தேதிக்கு மாற்றப்போகும் சமயத்தில் கோர்ட்டின் முன்பு ஒரு ஆரவாரமுண்டாயிற்று. எல்லோரும் அதைக் கவனித்தனர். ஸஞ்சீவபாபுவுடன், கிருஷ்ணமூர்த்திப் பிரபு நேராக ரங்கபாஷியம் நாயுடு நிற்கும் இடத்துக்குச் சென்று அவரைக் கட்டிக்கொண்டு மாமா! மாமா! என்று கதறி யழுதார். உடனே அவர் திடுக்கிட்டு ஹா! பிரேமநாதா! என் கண்மணி! என்று கூறியவாறே மூர்ச்சை போயினர். கோர்ட்டில் கூடியிருந்த ஜனங்கள் அனைவரும் இதென்ன ஆச்சரியம் என்று திகைத்தனர். விஜயநாதன் மெதுவாக நழுவிவிடப் பார்த்தான். ஸஞ்சீவ பாபு அவனைப் போலீஸார் வசம் ஒப்புவித்தார். ஜெகநாதனும், ஸ்ரீநிவாசப்பிள்ளையும் நடுநடுங்கியவர்களாய் நின்றனர். அரசப்பன் வண்டியின் அருகே ஓடிவந்து கிருஷ்ணமூர்த்திப் பிரபுவின் தந்தையான வேணுகோபால் நாயுடுவைக் கண்டுகொண்டு சாஷ்டாங்கமாய் வீழ்ந்து நமஸ்கரித்தான். லக்ஷ்மீகாந்தமும் விஜயநாதனின் மனைவியும் கோர்ட் வாசலின் முன்பு வந்தனர். லக்ஷ்மீகாந்தம் ரங்கபாஷியத்தைக் கண்டு அவர் கைகளைப் பற்றிக்கொண்டு தாரை தாரையாய்க் கண்ணீ ருதிர்த்தாள். இந்த சமயத்தில் விஜயநாதனின் மனைவி தனது பர்த்தாவைக் கண்டு அவலுடனும் தழுவிக் கொண்டாள். விஜயநாதனோ லக்ஷ்மீகாந்தத்தைக் கண்டு திகைத்து இனி தான் தப்ப வழியில்லையென்று கலங்கி நின்றான். இந்தக் கலக்கத்துடன் தன் மனைவியையும் பிரியமாய் எற்று, தான் அவளுக்குச் செய்த துரோகத்திற்காக மவுனமாய்க் கண்ணீர் விடலானான். ஜெனகலக்ஷ்மி, இராஜம்மாள், கனகவல்லி, தனலக்ஷ்மி இவர்களெல்லாம் கோர்ட் வாசலின் முன்பாகவே இருந்தனராதலின் அவர்கள் அடைந்த ஸந்தோஷப்பெருக்கை நம்மால் விவரிக்க ஸக்தியில்லை. ஜெனகலக்ஷ்மி தனது மாங்கல்யம் தனக்கு

நீலததென்று ஸஞ்சீவ பாபுவின் காலில் வீழ்ந்து வணங்கினள். ஸஞ்சீவ பாபு அவளுக்குத் தேறுதல் புகன்று ஆறுதல்படுத்தினர், வேணுகோபால் நாயுடு தனது மனைவியான தனலக்ஷ்மி விதவைக் கோலத்துடன் இருப்பதை நோக்கி மனமுருகினர். அந்த அம்மை லக்ஷ்மீகாந்தத்தையும், தனது பர்த்தாவையும், தனது காணுமற்போன கொலையுண்ட குமாரனையும் ஏககாலத்தில் அடையப்பெற்று ஆநந்தக் கண்ணீர் சொறிந்தாள். லக்ஷ்மீ காந்தம் தன் தாயாரைக் கண்டு கதறினள். வேணுகோபால் நாயுடு ரங்கபாஷியத்தின் கைகளைப் பற்றிக்கொள்ள, ஹா மாமா! என்று அவர் பிரலாபித்தார். எல்லாம் இன்பமா யிருந்தது. தாங்கள் நிற்குமிடம் கோர்ட்டு என்பதைக்கூட மறந்து பரவசத்தில் மூழ்கினர்.

அரை மணி நேரத்திற்குப் பின்பு யாவும் அமைதி படுத்தப்பட்டு கேஸின் விசாரணை மறுபடியும் ஆரம்ப மாயிற்று. ஸஞ்சீவ பாபு கூப்பிடப் பட்டார்.

ஸஞ்சீவ பாபு.—“நான் இந்தக் கேஸில் தலையிடுவதற்கு எனக்குப் பம்பாயி லிருந்தும் பெயர் ஊர் தெரிவியாமல் ஒருவர் என் விலாஸத்துக்குத் தந்தி யனுப்பியதே காரணம். தந்தி வந்த சமயம் நான் கல்கத்தாவில் இல்லை. பிறகு எப்பிரல் மாதம் 17-ம் தேதி நான் கல்கத்தா வர அத்தந்தியையும் பார்த்தேன். அந்த சமயம் எங்கள் குடும்பத்தில் கலகமாதலின் தக்ஷணமே புறப்படக் கூடவில்லை. அத் தந்தியில்—‘என்னை ஸர்வ ஜாக்கிரதையாய்க் காத்தற்பொருட்டு நீங்கள் திரிச்சிராப்பள்ளியில் இருக்க வேண்டும்”—என்று கண்டிருந்தது. வேறு விவரம் ஒன்றுமில்லை. பெயருமில்லை. இது என்னவோ மோசச் சூழ்ச்சியென்று நான் கருதித் திரிச்சினுப்பள்ளிக்கு வந்தேன். திரிச்சினுப்பள்ளி போஸ்டாபீஸ் இனிஸ்பெக்டரிடம் நான் எந்தப் போஸ்டாபீஸிலும் கிளார்க்குபோல் இருந்துகொண்டு நடிப்பதற்கு அநுமதிப்பெற்றுக்கொண்டு நாலைந்து தபாலாபீஸ்களில் இருந்துவிட்டு திரிச்சிகோட்டை போஸ்டாபீஸில் குமஸ்தாபோல்

இருந்த சமயம், டாக்டர் ராமநாத முதலியார் கல்கத்தாவிலுள்ள ஸஞ்சீவபாபுவுக்கென்று ஒரு தந்தியை அனுப்ப திரிச்சிக்கோட்டைப் போஸ்டாபீஸுக்குத் தமது சேவகனை அனுப்பினர். அத் தந்தியை அனுப்பும்படி அவரது வேலைக்காரன் என்னிடம் தர, நான் அதைப் பார்த்துப் புன்னகைகொண்டு டாக்டர் ராமநாத முதலியாரை நேரில் சந்தித்தேன். அவர் பிரேமநாதனின் கொலையைப்பற்றி ஆராயும்படியாக என்னை நியமித்தார்''—என்று அதற்குப் பிறகு தான் லண்டனுக்குப் போகும்வரையில் நடந்த செய்திகளை யெல்லாம் விஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

தோண்டாடிப்பொடி :—“உமக்குப் பேர் ஊர் இன்றித் தந்தி தந்தது இன்னாரெனக் கண்டு பிடித்துவிட்டீரா?''

ஸஞ்சீவ :—“ அந்தத் தெரிந்துகொள்வதற்கு லண்டன்வரையும் போகவேண்டியதாயிற்று. தந்தி யனுப்பியது பிரேமநாதன் தான். டாக்டர் ராமநாத முதலியார் பிரேமநாதனின் சவம் காணமற்போனதை விவரித்தபோதே, நான் அவரிடம்—“ இந்த விஷயத்தில் எனக்குள்ளாக ஒருவிதமான அபிப்பிராயம் தோன்றுகிறது ; அதைப் பிறகு தெரிவிக்கிறேன் '' என்று அவரிடம் கூறினேன்.''

தோண்டாடிப்பொடி :—“ அந்த அபிப்பிராயம் என்ன ?''

ஸஞ்சீவபாபு :—“ பிரேமநாதன் உயிருடனும் ஓடிப்போயிருக்கவேண்டு மென்பதுதான். இதுவே நான் ஆதிமுதற் கொண்டுள்ள ஸ்திரமான அபிப்பிராயம். ஆனதால்தான் ரங்கபாஷியத்தின் மீது நான் ஸந்தேகிக்கவில்லை. இந்த நிலைமையில் கிருஷ்ணமூர்த்திப் பிரபு ஜனகலக்ஷ்மியின் விலாஸத்திற்கு மூன்று ரிஜிஸ்தர் கடிதங்கள் அனுப்பியிருந்ததை நான் பார்க்க நேரிட்டது. பிரேமநாதன் அதற்கு முன்வரையில் லண்டனில் இருந்ததாக அக்கடிதங்களால் ஊகிக்கும்படியாயிற்று. அதன் பிறகு மணியக்காரத்தெரு வீட்டில் ஸ்வாமிப்பெட்டியை நான் சோதித்ததில் பிரேமநாதன் ஜெகநாதனுக்கு எழுதிய கடிதங்கள் கிடைத்தன. அக்கடிதங்களின் கையெழுத்தையும், கிருஷ்ணமூர்த்திப்பிரபு அனுப்பிய

ரிஜிஸ்தர் கடிதங்களின் கையெழுத்தையும் நான் ஒத்திட்டுப் பார்த்ததில் ஒரு அக்ஷரமும் பேதப்படாமல் இரண்டும் ஒன்றாக ஒருவரே எழுதிய கடிதங்களாக இருந்தன. இதனால் நான் பிரேமநாதனே கிருஷ்ணமூர்த்தி என்று தீர்மானித்துக்கொண்டேன். இந்த நல்ல சந்தர்ப்பத்தில், அரசப்பனின் குமாரனையும் நான் கண்டுபிடித்து விடும்படியாகிவிட, அவன் மூலமாக அரசப்பனின் சித்தப்பிரமையையும் அகற்றி, உண்மையைத் தெரிவிக்கும்படி கூறினேன். அவன் பிரேமநாதன், வேணுகோபால்நாயுடு இவர்களெல்லாம் லண்டனில் இருப்பதாகவும், பிரேமநாதனுக்கு அங்கு கிருஷ்ண மூர்த்திப்பிரபு என்று பெயர் என்பதாகவும், ஆநந்தா பத்திரிகையை அவர் நடத்திவருவதாகவும், அவர்களுக்கும் தனக்கும் பிரதி கப்பலுக்கும் கடிதப் போக்குவரத்துகள் நடத்து வந்ததாகவும், அவர்களெல்லோரும் சீக்கிரம் புறப்பட்டு வருவார்களென்று தான் ஆவலுடனும் எதிர்பார்த்திருந்த சமயம் பிரேமநாதன் கொல்லப்பட்டுப் போகவே, தனது ஆசை—ஆவல்—அனைத்தும் திடீரென முறிந்து தனக்கு சித்தஸ்வாதீனம் தவறிப்போய் விட்டதாகவும் கூறினான். அதன் பின்னர் நான் லண்டனுக்குச் சென்று கிருஷ்ணமூர்த்திப் பிரபுவைக் கண்டுகொண்டேன். அவர் பிரேமநாதனைத் தமது நண்பரென்று கூறினர். டாக்டர் ராமநாதமுதலியார் பிரேமநாதனுக்கு வலதுகாலில் ஆறுவிரல்கள் உண்டென்று கூறி யிருந்தாரானதால், கிருஷ்ணமூர்த்திப் பிரபுவின் கால் விரல்களை நோக்கினேன். வலதுகாலில் ஐந்தே விரல்கள் காணப்பட்டன. எனக்கு மனம் திகீர் என்றது. இவ்வளவு பாடும் வீணாயிற்றே என்று உள்ளம் சலித்தேன். ஆயினும் பார்க்கலாமென்று (1) ஜகநாதநாயுடுவின் தோட்டத்திலும், (2) சமயபுரத்தில் இறந்து கிடந்த நோயல் இடமும், (3) சமயபுரக் கிணற்றினுள்ளும், என் சோதனையால் நான் கண்டெடுத்த ஒரே விதமான மூன்று துண்டுகளையும் கிருஷ்ணமூர்த்திப் பிரபுவினிடம் தந்து என்னை வீணாக சோதிக்கவேண்டாமென்றேன். அதற்கு அவர் தாம் பிரேமநாதனுடன் திரிச்சிக்கு வந்தபோது மூன்றிடங்களில்

இத்துண்டைக் கைதவற விட்டதாக சாமர்த்தியம் பேசினர். நான் இன்னும் பார்க்கலாமென்று—ரங்கபாஷியம் நாயுடு பிரேமநாதனைக் கொலை செய்த குற்றத்துக்காகத் தூக்குத்தண்டனை விதிக்கப் பட்டிருப்பது தெரியுமா—என்றேன். அவ்வளவுதான் தாமதம்—அவர் என் ரங்கபாஷியம் மாமாவா—என்னைக் கொன்ற குற்றத் துக்காகவா—என்று தலையை மோதி யடித்துக்கொண்டு கதறினர். அதன்பின்பு சகல விவரங்களையும் அவருக்குத் தெரிவித்தேன். அப்பால் என் வழிக்கு அவர் வருவதானர். தாம் ஆபீஸ் மானேஜரைக் கண்டிக்கப்போன சமயம் தமது வலதுகாலில் உள்ள ஆறுவதுவிரல் ஒரு யந்திரத்தில் பட்டு காயமுண்டாகிவிட, அதை அப்படியே எடுத்துவிடும்படி நேர்ந்ததென்றும், ஸஞ்சீவபாபு என்றுபெயர் வெகு பிரபலமாயிருக்கிறதே—அதைச் சோதிப்போமென்று பேர் ஊர் இன்றித் தாமே பம்பாய்க்குத் தந்தி அனுப்பியதாயும்—எல்லாம் விஸ்தாரமாகக் கூறினர். அதன் பின்னர் திருச்சிராப்பள்ளிக்குப் பிரயாணப்படத் தயாரானேம்"—என்று இக் கேஸின் சம்பந்தமாக ஆதிமுதல் தாம் செய்துவந்த யோசனைகள் அனைத்தையும் விவரித்து அந்தக் குறிப்புகள் எழுதியுள்ள நோட்டு புஸ்தகத்தையும் கோட்டாரவர்களின் வசம் ஒப்புவித்தார். கிருஷ்ணமூர்த்திப் பிரபுவைச் சந்தித்த முதல்தினமே-அவர்-தான் பிரேமநாதனல்லவென்று மயக்கிவிட்ட அந்தநிமிஷமே—எப்படியும் அவரை யொரு சாக்ஷியாக விசாரிக்கவேண்டுமென்றெண்ணி, ஸ்ரீனிவாஸ ஐயருக்கு அவரை ஒரு ஸாக்ஷியாகப் பிரேமநாதன் கேஸில் போடும்படி தந்தி கொடுத்துவிட்டேன். அதற்குப் பிறகு மறுதினத்துச் சந்திப்பில்தான், தானே பிரேமநாதன் என்று அவர் ஒப்புக்கொள்ளும்படி யாயிற்று என்று ஸஞ்சீவபாபு கூறினர். இக்கேஸில் அநேக சிக்கல்கள் இருந்தன. நான் ஜெனகலக்ஷ்மியை விசாரித்தபோது பிரேமநாதன் கொலை நிகழ்ந்த தினத்துக்கு மூன்று நாளைக்கு முன்பு ரங்கபாஷியம், ஜெகநாதநாயுடுவின் வீட்டிற்குப் போனதாக ஜெனகலக்ஷ்மி என்னிடம் பொய் உரைத்தது. பிறகு நான் ஆராய்ச்சி செய்ததில், பிரேமநாதன் இறப்பதற்கு

முந்திய தினத்தில்தான் ரங்கபாஷியம் ஜெகநாதநாயுடு வீட்டிற்குப் போயிருக்க வேண்டுமென்பதாகப் புலப்பட்டது. ஜனகலக்ஷ்மியை நான் திருப்பிக் கேட்க, அதற்கும் ஓம் என்று தலையசைத்துவிட்டு, தப்பறிபவரின் முன்பு எப்படி யதார்த்தங்களை அப்படி யப்படியே கொட்டுவதெனப் பின்வாங்கிப் பொய் பேசியதாகச் சொல்லிற்று—என்று இக்கேஸில் தாம் பட்ட கஷ்டங்களையெல்லாம் ஒன்றும் விடாது கூறினார்.

இச்சமயத்தில் ரங்கபாஷியம் நாயுடு தமக்கு சித்தம் தெளிவாக இருக்கிறதென்றும், தாமும் இரண்டொரு விஷயங்கள் கூற விரும்புவதாகவும் கோர்ட்டாருக்குத் தெரிவித்துக்கொண்டார்.

கோர்ட்டார்.—"ரங்கபாஷியம் நாயுடு! நீர் மிகவும் அந்தஸ்துள்ள மனிதர். உம்முடைய நல்ல மாதிரிக்கும், அருமையான குணத்திற்கும் இப்படிப்பட்ட கஷ்டம் உமக்கு வந்திருக்கக் கூடாது. நீர் சொல்வதைக் கேட்க இந்தக் கோர்ட்டார் மிகவும் விரும்புகிறார்கள்."

ரங்கபாஷியம் நாயுடு.—"எனக்கு அதிகம் பேசச் சக்தியில்லை. என் விஷயமாய் ஸஞ்சீவபாபு யூகித்த ஊகங்கள் யாவும் சரியாய்ப் பொருந்தியுள்ளன வென்றும், விஜயநாதனின் கடிதத்தின்மேலும், ஜெகநாதநாயுடு கேட்டுக்கொண்டதற்கு இணங்கியுமே நான் பெண்வேடம் தரித்தேனென்றும், நான் சென்னை சுந்தர விலாஸ ஸபையில் ஒரு அங்கத்தினனாதலால், பெண்வேடம் புனைந்து இதற்கு முன் ஆக்ட் செய்திருப்பது உண்டாதலின், இங்கு பெண்வேடம் தரிக்க முற்படலானேனென்றுமே நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பிரேமநாதன் இறப்பதற்கு முன் தினம் ஜெகநாதநாயுடுவின் வீட்டிற்கு அவர் வற்புறுத்துதலின்மேல் தான் சென்றேன். விஜயநாதன் கண்டோன்மெண்டில் தாமோதரம் ஐயங்காரை பிடித்துக் கொடுப்பதாகச் சொன்னதால் அதன் பொருட்டும் பெண்வேடம் தரிக்க சிரத்தை கொள்வதானேன். ஸஞ்சீவபாபு எனக்கு ஆஸ்பத்திரியில் வெகுவாகத் தேற

தல் உரைத்து வந்தார். பிரேமநாதனை எப்பிரல் மாதம் 17—ம் தேதியன்று அவன் என் வீட்டிற்கு வந்தபோது சந்தித்தேன்."

தொண்டரடிப்பொடி.—"ஸஞ்சீவ பாபுவை இன்னொரு விஷயம் கேட்கவேண்டி யிருக்கிறது. கொல்லப்பட்ட பிரேமநாதன் பிழைத்து ஓடிவிட்டதாக அவர் எப்படி என்ன ஆதாரத்தைக் கொண்டு நம்பினர் என்பதுதான். அவரது துப்பறியும் சாமர்த்தியம் பிரகாஸ மாவதற்காக நான் இந்தப் பிரசினையைக் கேட்க விரும்புகிறேன்."

ஸஞ்சீவபாபு.— "பிரேமநாதன் உடல் இருதுண்டாகக் கொலை செய்யப்படாமல், அடித்துக் கொல்லப்பட்டான் என நான் கேள்வியுற்றதால், நான் பிரேமநாதன் மரணமூர்ச்சை யடைந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டேன். மூர்ச்சை தெளிந்ததும் அவன் ஓடிப்போயிருக்கலாமென்று என் அநுமானம். சாதாரணமாக சில வேளைகளில் நாடி நின்றுவிடும் ; ஹிருதயம் நின்றுவிடும் ; மூச்சு இராது ; உள்ளுக்கு அடங்கி விடும். கண் பஞ்சடைந்துவிடும். தேகம் சூடு காட்டாது குளிர்ந்து போய்விடலாம். உயிர் மட்டும் நரம்பு முடிச்சில் (Nerve centre) அடங்கியிருக்கும். இதற்கு (Catalepsy) "மாரணமூர்ச்சை" என்றும், (Suspended animation) தற்சமயத்துக்கு உயிரோட்டம் நிறுத்தப்படல் என்றும் பேரிட்டிருக்கிறார்கள். தேகம் இறந்து போயிருந்தாலும் உயிர் அடங்கி யிருக்கும். உள் மனசு விழித்துக்கொண்டு நடக்கும் விஷயங்களைக் கவனித்து உபேக்ஷையுடன் நிற்குமென்ப. ஆகையால் சவத்தின் விஷயமாய் அவசரப்படக் கூடாது. நாற்றமெடுத்தால்தான் மரணம் உள்ளபடியேவந்ததென்று சொல்லலாம். (Disintegration—Dissolutian must set in) தக்க டாக்டர் வந்து சொன்னால்தான் மரணம் சரியானதென்றும், அல்லது மரணமல்ல, "மரணம்போன்ற மூர்ச்சை நிலை" யென்றும் துணியக்கூடும். அனுபவமும் அப்படியே. மரணம்போன்ற மூர்ச்சையாயிருக்கும் பக்ஷத்தில், அது இயற்கையின் காருண்யம் (Nature's Kindness to the body) என்று நினைத்து நாயோ

ளியை மருந்து 'கிருந்து' கொடுத்து, புகை 'கிகை' காட்டி வதைக்காமல், ஓய்வடைய (To take complete rest) விட்டுவிட வேண்டும். அந்த நோயாளி மயக்கமாகக் கிடக்கும் அறையில், நல்ல காற்றுமட்டும் தடை யில்லாமல் உலாவ இடம்தந்து, அங்கே ஜனங்கள் கும்பு கூடாதபடி செய்யவேண்டும். அவன் கடைசியில் பிழைத்துக்கொள்வான். இப்படியாகப் பிரேமநாதனும் பிழைத்து எழுந்து ஓடிவிட்டிருக்க வேண்டுமென்றும் நினைத்தேன். மற்றபடி சவம் காணமற்போனதாக நான் பெரும்பான்மையும் நம்பவில்லை. ஆனால் இந்த அபிப்பிராயத்தை அப்போது நான் வெளியிட்டிருப்பின் என்னை அனைவரும் பரிகஸிப்பார்களாதலின் எவருக்கும் சொல்லவில்லை."

கிருஷ்ணமூர்த்திப் பிரபு சாக்ஷியாகக் கூப்பிடப்பட்டார்.

**கிருஷ்ணமூர்த்தி.**—நானு தேசங்களைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் மேலீட்டினால் திடீரென்று பல வருஷங்களுக்கு முன் நான் என் பெற்றோர்களை விட்டுப் பிரிந்து பம்பாய் வரைக்கும் சென்றுவிட்டேன். அங்கு ஒரு பத்திரிகையின் ஆபீஸில் வேலைகளைக் கற்றுக்கொண்டு சில மாதங்கள் இருந்தேன். அந்தப் பத்திராதிபர் தாம் லண்டனுக்குச் சென்று வாரம் இருமுறைப் பத்திரிகை யொன்று நடத்தப் போவதாகக் கூறி என்னையும் உடன் அழைத்துக்கொண்டு சென்றார். நான் படித்த படிப்பு மிக்க சொற்பமானதே யாயினும், புள்ளிக் கணக்குக்கு உதவாத அப் பள்ளிப்படிப்பை எனது சுயமுயற்சியாலும், அப்பத்திராதிபரது ஸகவாசச் சேர்க்கையாலும் வெகு தூரம் விருத்தி செய்து கொண்டேன். என் மட்டில் தெரிவதென்னவென்றால், படிப்பின் திறமையால் தான் பெரிய பெரிய வியாசங்கள், நூல்கள் எழுதும் ஸக்தி வாய்க்கின்றன வென்பதை என் அநுபவத்தைக்கொண்டு நான் நம்பமுடிய வில்லை என்பது தான். படிப்பின் திறமை என்று சொல்லுமிடத்து—சிலர் எவ்வளவோ வித்யாபட்டங்களைச் சுமந்தவர்களாயிருந்தும் அற்ப கல்வியுடைய

சில இயற்கைப் புத்திசாலிகளின் முன்னதாக — அவர்களின் புத்தி சாதுர்யங்கள் குறைந்து போகின்றன. சொற்ப கல்வியுடைய வராயினும், அதற்கென்றே அவர்கள் பிறந்தவராயிருப்பின், அவர் கள் எழுதுகோலைக் கையிலேந்தியவுடனே மடமட வென்று ஓட, அச்சமயம் இயற்கைச் சக்தியானது விஷயங்களை வெகு வேக மாய்க் கொடுத்துக் கொண்டேபோக-அவர்களின் நூல், வியாசம் மிக்க அபூர்வமானதாக—அரிய கற்பனைகளாக அமைந்து விடுகின் றன. இந்த இயற்கையின் வேகம் சரிவர இலக்கணம் தெரியாத வர்களைக்கூட வெகு பொருத்தமான கவிகள் இணைக்கும் படியான நிலைமைக்குக் கொண்டுவந்து விடுகிறது. இந்த இயற்கையின் வேகத்து உதவியால், லண்டனில் என்னுடைன் வந்தவர் ஏற் படுத்திய ஆநந்தா பத்திரிகைக்கு நான் உதவிப்பத்திரா திபரா னேன். பிறகு அவர் என் மீதுள்ள பிரீதியால் எனக்கே அப் பத்திரிகையைக் கொடுத்துவிட்டு இந்தியாவுக்குச் சென்று விட் டார். சென்ற இடத்தில் அவர் காலகதி யடையவும் நேர்ந்து போனது. நான் அதற்கு அடுத்த வருஷத்தில் அதைத் தின சரிப் பத்திரிகையாக மாற்றிவிட்டேன். ஒரு நாள் நான் மேல் மாடியில் நின்று கொண்டிருக்கையில் ஆச்சரியப் படத்தக்க விதமாய்க் கீழே என் பிதா நடந்து செல்வதைக் கண்டேன். உடனே இறங்கி வந்து அவரை அழைத்துச் சென்று என் கதைகள் எல்லாம் சொன்னேன். அவரும் நானும் திடீரென்று திரிச்சினுப் பள்ளிக்கு வந்து சேரவேண்டுமென்று பேசிக்கொண்டோம். பிறகு புதிதாக வீடும் நிலங்களும் வாங்கும் பொருட்டு என் பள்ளித் தோழனான ச. கோ. ஜெகநாதனுக்கு நான் கடிதம் எழுதினேன். அதை இந்த மோசக்கார ஜெகநாத நாயுடு பெற்றுக்கொண்டு என் நேசன் எழுதியது போல் வெகு அன்பான கடிதங்கள் எனக்கு அனுப்பினார். அக்கடிதங்களைப் பார்த்தபோதே கையெழுத்து பேதப்படுவதைக் கண்டு நான் ஸம்ஸயித்தேன். ஆயினும் இந்த ஸம்சயம் என் நெஞ்சில் ஆழமாய்ப் பதியவில்லை., சிறுகச் சிறுகப் பதினாயிரம் ரூபாய்கள் போல் அனுப்பினேன். சமயபுரத்துக்கு

அருகே நிலங்கள் வாங்கியிருப்பதாய் ஜெகநாத நாயுடு எனக்கு எழுதினர். அவற்றை ரகசியமாகப் பார்த்துவரும் பொருட்டு என் விஸ்வாச ஊழியனான நோயல்—என்ற காப்பிரியுடனும் இந்தியாவுக்குப் புறப்பட்டு பம்பாய் வந்து சேர்ந்தேன். சிறு போதிலேயே நான் ஸஞ்சீவபாபுவின் துப்பறியும் விநோதங்களைக் கேட்டிருப்பதால், பரிஹாஸமாக அவருக்குப் பெயரின்றி ஒரு வேடிக்கைத்தந்தி கல்கத்தாவுக்கு அனுப்பினேன். ஜெகநாத நாயுடுவுக்கு ஏற்கெனவே நான் தெரிவித்தபடி ஏப்ரல் மாதம் 15-ம் தேதி இரவு மெயிலில் ஏறி 16-ம் தேதி காலையில் திரிச்சி ஜெங்கிஷன் வந்து சேர்ந்தேன். ஒருவர் "பிரஜாநுகூலன்" பத்திரிகையைத் தம் கையில் பிடித்துக்கொண்டு வண்டி வண்டியாகப் பார்த்துக்கொண்டு வந்தார். அவரை நோக்கி—What is your name— (உன் பெயர் என்ன?) என்று வினவினேன். அதற்கு அவர் தாம் தான் ஜெகநாத நாயுடு என்று சொல்லிக் கொண்டார். அருகில் இருந்தவர் தம்மை விஜயநாதன் என்று சொல்லிக் கொண்டார். நான் ஜெகநாத நாயுடுவைப் பார்த்து எனது பள்ளித்தோழனான ஜெகநாதன் எங்கே யென்று வினவ, தானே அவன் என்று கூறி "என்ன என்னை அடையாளம் தெரியவில்லையா? அதற்குள்ளாகவா மறந்து போனய்; நான் உன் பள்ளித்தோழனல்லவா? அநேக வருடங்களாய்விட்டமையின் என்னை அடையாளம் தெரியவில்லை போலும்!" என்று முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல் என்னிடம் பேசினர். நான் தக்ஷணமே ஏதோ கபடம் இருக்கிறதென்று மனதில் நினைத்துக்கொண்டேன். சற்று சமாளித்தபடியே, பிறகு நான் சிறிது ஞாபகம் வந்தது போல் பாவனை காண்பித்து, பாசாங்கு நேசன் ஆன ஜெகநாத நாயுடுவைப் பழய அடையாளங்கள் ஏதோ உபாயமாய் உமது முகத்தில் காணப்படுகின்றன வென்றும், பரஸ்பரம் பிரிதலின் கொடுமையானது—இன்னொரு காலத்தில் அவர்கள் தங்களுக்குள் சந்தித்துக் கொள்ளினும், பருவ வேற்றுமையானும், லோக கஷ்டங்களில் சிக்குண்டுபட்ட தொல்லை

களானும், காலபேதத்தானும்; முகம் மாறி, முன் பார்த்த உருவமே இல்லாமற்போய் புது வதனமாகத் தோற்றவைத்து விடுகிற தென்றும் வெகு சரசமாகப் பேசி என்னைப்பற்றி சம்ஸயிக்காதபடி நான் செய்து கொண்டேன். பிறகு நோயலும் நானும் ஜெகநாத நாயுடு காட்டிய மோட்டாரில் ஏறிக்கொண்டோம். ஜெகநாத நாயுடுவும் என் அருகில் உட்கார்ந்தார். விஜயநாதனை மோட்டார் ஓட்டுபவன் என்று எனக்கு ஜெகனாத நாயுடு கூறினார். இந்நால் வருமாக ஸ்ரீரங்கம் வந்தோம். அங்கு நடந்த சங்கீதக் கச்சேரியில் அன்று பகல் முழுதும் உல்லாசமாய்ப் போயிற்று. மாலையில் இருட்டிய பின்பு நால்வருமாக மோட்டாரில் ஏறினோம். சமய புரத்தைக் கடந்து அப்பால் உள்ள ஒரு காட்டின் வழியே மோட்டார் செல்லுகையில் ஒரு கூட்டம் ஆட்கள் நின்றுகொண் டிருந்தனர். விஜயநாதன் மோட்டாரைத் தானே நிறுத்தினான். இதை நான் நிச்சயமாகச் சொல்லக்கூடும். ஜெகநாத நாயுடுவை அங்கிருந்த கூட்டத்தார் கயிற்றால் கட்டினர். உடனே நானும் நோயலும் அவர்களை எதிர்த்தோம். என்னைக் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போய் சிறிது தூரத்தில் போட்டனர். சில நிமிஷத்திற் கெல்லாம் நோயலின் துப்பாக்கி விஜயநாதன் கையில் இருப்பதும், நோயல் ஓடுவதும், அவனைத் துரத்திக்கொண்டு விஜயநாதன் செல்வதையுங் கண்டேன். விஜயநாதன் கடைசியில் நோயலை நெருங்கி பிஸ்தோலால் அவனைச் சுட முயலவே அவன் அதை வெகு சாமர்த்தியமாகப் பிடுங்கி எறிந்துவிட, விஜயநாதன் அங்கு கிடந்த கட்டையை எடுத்துக்கொண்டு நோயலின் மார்பில் அடிக்கவே அவன் நிலமிசை சாய்ந்தான். விஜயநாதனுக்குத் துணையாகச் சிலர் ஓடிவந்து நோயலைப் பின்னும் நன்கு புடைத்து சவமாகச் செய்துவிட்டனர். இந்த வேலை தீர்ந்ததும் என்னை நெருங்கி, என்னைத் தூக்கிச்சென்று ஒரு கிணற்றில் எறிந்துவிட்டனர்; ஜெகநாத நாயுடுவையோ அந்த இடத்தில் காணவில்லை. கிணற்றுள் வீழ்ந்த நான்—எனக்கு நீந்தத் தெரியுமாதலின் சமாளித்து ஜலத்தின்மேல் எழுந்து ஏறக்கூடிய இடத்

தைத் தடவிப் பார்த்து அதில் காலை வைத்து ஏறி வெளியில் வந்தேன்; இந்த சமயம் எனது சட்டைப் பையிலிருந்து பத்து பவுன் முடிக்கப் பெற்றிருந்த என் பெயர் பதிந்த பட்டுத் துண்டொன்று கிணற்றில் தவறி விழுந்துவிட்டது; அதை நான் லக்ஷ்யம் செய்யவில்லை. என் கவனமெல்லாம் நோயலின் மீதே சென்றிருந்தது. அமரிக்காவுக்கு நான் போய் அங்கே மெஸ்மரிசம் கற்றுக்கொண்டிருக்கையில் இந்த நோயல் எனக்கு அங்கு கிடைத்தான். உற்றார் உறவினர் எவருமற்ற அநாதையான அவனை நான் என் சொந்தத் தம்பி போல் கருதி நடந்து வந்தேன். நான் கிணற்றிலிருந்து வெளி வந்ததும் வெகு பரபரப்புடன் நோயலைத் தேடினேன். எங்கும் இருள் மயமாக இருந்தது. ஜன ஸஞ்சாரமேயில்லை. மிகுந்த ஏக்கத்துடன் நடந்து சென்றுக்கொண்டிருக்கும் போது ஒரு கூரை வீட்டினுள் சிறிது தீப வெளிச்சம் தோன்றிற்று. கதவின் சந்தில் பார்த்தபோது என் பிரியமான நோயலை ஒரு சோபாவின் மீது உட்கார வைப்பதைக் கண்டேன். மிக்க ஆக்கிரகத்துடன் என் திருஷ்டியை இன்னும் விசாலப்படுத்திக்கொண்டு உள் நடக்கும் விஷயங்களைக் கவனித்தேன். பிஸ்தோலினால் அவன் வாயில் விஜயநாதன் சுட்டான். இது எதற்காக வென்பது எனக்கு அப்பொழுது தெரியாது. தற்கோலைக்காட்சி தயாரித்தற் பொருட்டேன்று ஸஞ்சீவபாபு லண்டனில் எனக்கு விவரித்துக் கூறிய பின்பே விளங்கிற்று. பின்பு கால் நடையாகவே நடந்து சுண்ணாம்புக்காரத் தெருவுக்கு வந்தேன். வந்ததும் ரங்கபாஷியம் மாமாவின் வீட்டின் கதவைத் தட்ட, அரசப்பன் கதவைத் திறந்து என்னைக் கண்டதும் திடுக்கிட்டு வெகு பிரியத்துடனும் நின்றான். பின்னர் ரங்கபாஷியம் மாமாவையும் இராஜம்மாளையும் அத்தையையும் கண்டுகொண்டேன். என் தாயார் தமக்கை முதலானோர் இராமேஸ்வரம் சென்றிருப்பதையும் அறிந்துகொண்டேன். மறுநாட் காலையில் ஜெகநாத நாயுடுவை வழியில் சந்தித்தேன். என்னைக் கண்டதும் அவர் மரம்போல் நின்றுவிட்டார். பிறகு தன்னைத்தானே தைரியப்படுத்திக் கொண்டு, தான் சமய

புரத்தில் அக்கொள்ளைக் கூட்டத்தாரால் தாக்குண்டு மிக்க அவஸ்தை யுண்டதாகவும் பேசி, நீ எப்படி தப்பிவந்தாய்—என்று வெகு பிரியமாய் உசாவினர். நான் அதற்குச் சரியாகப் பதில் சொல்லவில்லை. பின்பு தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றார், தாம் என் தமக்கையின் கணவரென்றும் எடுத்துக் காட்டினர். சமயபுரத்தில் நிலங்கள் வாங்கியதான பேச்சையே அவர் எடுக்க வில்லை. நானும் காண்பித்துக் கொள்ளவில்லை. பிறகு நான் வந்துவிட்டேன். மறுநாள் ரங்கபாஷ்யம் மாமா தனக்கு வந்த வாரண்டு நிமித்தமாக ஜெகநாதனின் சொற்படி அவன் வீட்டிற் குச் சென்றார். பிறகு பகலில் நான் இராஜம்மாளுடன் பேசிக் கொண்டிருந்தபோது, இந்தியப் பெண்களின் தன்மையை விளக்க இராஜம்மாள் எனக்கு ஒரு கடிதம் எழுதிக்கொடுக்க, அதை நான் பெற்ற சமயம், விஜயராகவன் வந்து தனது தந்தை என்னை யழைப்பதாகக் கூற, நானும் அக்கடிதத்துடன் கையில் என் கைத் துண்டை வைத்துக்கொண்டு ஜெகநாத நாயுடுவின் தோட்டத்திற் குள் சென்றேன். என் கூட வந்தவர்களைத் துரத்திவிட்டு தோட்டத்தின் உட்கதவைத் தாளிட்டு விட்டனர். உடனே என்னை ஒரு பத்து பேர் போல் சூழ்ந்துகொண்டு கட்டைகளால் அடித்துக் கொல்ல ஆரம்பித்தனர். என்னை மறுபடியும் இரண் டாம் முறையாகக் கொன்று தீர்த்துவிட ஜெகநாத நாயுடு உத்தே சித்துவிட்டாரென்று தெரிந்து கொண்டேன். என் கையிலிருந்த துண்டும் இராஜம்மாளின் கடிதமும் என்னிடமிருந்து நழுவிக்கீழே விழுந்தன. அந்தசமயம் எனக்கு ஒரு நல்ல யோசனை உண்டா யிற்று. நான் அமெரிக்காவுக்குச் சென்று கற்றிருந்த மேஸ்மரிசம் (Mesmerism) இந்தசமயம் உபயோகப்படாதா என்று எண்ணி, மேஸ்மரிசம் என்னும் மாயா நித்திரையை எனக்குள் உண்டாக்கிக் கொண்டு மூச்சை என்னுள் அடக்கிய படியே பிரேதம்போல் கீழே விழுந்துவிட்டேன். தக்ஷணமே என் செவிப் புலன்களும் கண் பார் வையும் யாவும் என்னுள் அடங்கிவிட்டன. பிரக்ஞையற்றுப் போவ தால், (by Unconsciousness) சிலவேளை மனிதருக்கு நோய்தெரிவ

தில்லை யென்கிறார்கள். அது உண்மையே யாயினும், விஷயம் அப்படிக்கல்ல. மொத்தமாகச் சொல்லவேண்டுமானால், பிரக்ஞை யற்றுப் போவதே கிடையாது. பிரக்ஞை அற்புதமாக மாறிப் போவதால் (by super—consciousness or Exalted consciousness) அறிவானது தேகத்தைப் பார்ப்பதைவிட்டு, கடவுளைப் பார்க்க ஆரம்பித்து விடுவதால்தான், இவ்வுலக சம்பந்தமான தேக நோய் எதும் தெரிவதில்லை—தெரிய வருகிறதில்லை. அவனுக்கு உலக ஸ்மரணையே இல்லை. அவன் ஒரு சவத்திற்குச் சமானமே. என்னை யடிக்க வந்தவர்களிட மிருந்து நான் தப்புவித்துக் கொள்வதற்காக—உடனே—ஸ்மரணை யற்றவனாக—சவம்போல—நான் காண்பித்துக் கொள்ளவேண்டியது கட்டாயமாக இருந்தது. நான்மூச்சை யடக்கியதும்,என் உள் நினைவுஇருந்ததேதவிர,வெளி விஷயங்களைக் கவனிக்கும் ஸக்தி எனக்கு இல்லாது போயிற்று. எனக்கு அந்த ஸக்தி இருந்திருந்தால் ரங்கபாஷ்யம் மாமா எனக் காகக்கைதியானவிஷயங்கள்எனக்கு நன்குதெரிந்துவிட்டிருக்கும். ஆஸ்பத்திரியில் எனக்கு சொந்தப்பிரக்ஞை வந்துவிட்ட சமயத் தில் டாக்டரும் என்னை யறுத்துச் சோதிக்க வேண்டுமென்று தம் மில் தாமே கூறிக் கொண்டார். அந்த சப்தம் என் செவியில் நன்கு விழுந்தது; இனியும் நம் மெஸ்மரிஸ வித்தையைக் காண் பிப்பதானால் தேகம் அறுப்பட்டு இறக்கவேண்டியதே யென்று உணர்ந்தவனாய், மெதுவாய் சப்தம் செய்யாமல் எழுந்து வண்டிப் பேட்டையின் வழியாக ஓட ஆரம்பித்தேன். அதே சமயம் என் னைக் குறி பார்த்து ஒருவர் சுடுவதைக் கவனித்தேன். அது வேறொருவர்மீது பட்டதாகமட்டும் வெடியின் சப்தத்தால்--மனித அலறுகையாலும் உணர்ந்து கொண்டேன். இனி திரிச்சினாப் பள்ளிக்கு வரவே கூடாதென்று நேராக ஜெங்கிஷனுக்குச் சென்று என்னிடமிருந்த பணத்தைக்கொண்டு டிக்கட்டு வாங்கிக்கொண்டு இரவு 2-மணி வண்டியிலேறி சென்னை சென்று அங்கிருந்து பம் பாய் மார்க்கமாக லண்டனுக்குச் சென்றுவிட்டேன். பிறகு லண்டனிலிருந்து எனக்கு அங்குள்ள கிருஷ்ணமூர்த்தி என்ற

பெயரால் அத்தை ஜெனக லக்ஷ்மிக்கு மூன்று ரிஜிஸ்தர் கடிதங்கள் அனுப்பினேன். அதன் பின்னர் பலமாதங் கட்குப் பிறகு ஸஞ்சீவ பாபுவைக் கண்டு அவரால் ஸகல சங்கதிகளும் தெரிந்துகொண்டு இந்தியாவுக்குப் பிரயாணப் படத் தயாரானேம்.நான் என் ரங்கபா ஷியம் மாமாவை இந்தக் கதியில்விட்டுவிட்டுத் தூரமானநாட்டிற்கு ஓடிவிட்டபோதிலும் அது மனதறிந்து செய்ததல்ல. அவரையும் என்னையும் பிணைத்துக் கொண்டிருந்த சங்கிலியின் கரணையானது ஒருபோதும் அற்றுப்போனதில்லை"—என்றுவெகு விஸ்தாரமாகக் கூறித் தேம்பித் தேம்பிக் கதறினர்.

ஸ்ரீநிவாஸய்யர்:-"என்னுடைய கக்ஷிக்காரனின்உண்மையான நியாயம் இப்பொழுது மிஸ்டர் தொண்டரடிப்பொடி அவர்களுக்கு நன்கு விளங்கி யிருக்குமென்று நினைககிறேன். கோர்ட்டாரவர் கள் என் கக்ஷிக்காரன் குற்றவாளியா அல்லவா என்பதைத் தீர்மா னிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்."

தொண்டரடிப்பொடி ;—"ரங்கபாஷியம் நாயுடு இவ்வளவு தெளிவானருசுவில் விடுபடுவதைக் காண என் மனம்மிகவும் களிக் கின்றது. இந்தக் கேஸுடன் ஸ்ரீநிவாசப் பிள்ளை, விஜயநாதன், ஜெகநாத நாயுடு இவர்களின் கேஸ்களைச் சேர்க்காமல் அதைத் தனிப்பட விசாரித்து முடிவுசெய்ய வேண்டும். ஸ்ரீநிவாஸப்பிள்ளை பள்ளத்தூரில் ஒரு கூட்டுக் கொள்ளைக்காரர்களின் தலைவனு யிருந்து செய்த அக்கிரமங்கள் கொலைகள் அநந்தம். இன்னும் ஸஞ்சீவபாபுவின் யூகப்படி டாக்டர் ராமநாதமுதலியாரைச் சுட்டு விட்டால், பிரேமநாதனின் சவம் வேறொரு டாக்டரால் சோதிக் கப்பட்டால், தங்களுக்கு அது அநுகூலமாயிருக்குமென்று ஜெக நாதநாயுடுவும் சீனிவாசப்பிள்ளையும் ஆஸ்பத்திரிக் கெதிரில் மறைந்து நின்றுகொண்டிருக்கிறார்கள். அந்த சமயம் சவமாகக் கிடந்த பிரேமநாதன் டாக்டர் கையிலிருந்தும் தப்பி ஆஸ்பத்திரி யிலிருந்தும் ஓடுகிறார். அவர் போகும் சாயலை டாக்டர் ராம நாத முதலியாரென்று சீனிவாசப்பிள்ளை கருதிக்கொண்டு இருட் டில் சுடுகிருன். அதே சமயம் ஆஸ்பத்திரி சேவகனுக்கு சாதம்

எடுத்துக்கொண்டு அவ்வழி வந்த அச்சேவகனின் மனைவி மீது அந்தத் துப்பாக்கியின் வெடி பட்டுப் போகிறது. உடனே அவள் இறக்கின்றாள். டாக்டர் ராமநாத முதலியாரே பிரேமநாதனின் சவத்தை மறைத்து வைத்து விட்டது போலவும், அப்படி மறைத்ததை அந்த சேவகனின் மனைவி கண்டுவிடவே, அது வெளிவரா வண்ணம் அவளை டாக்டர் ராமநாத முதலியார் சுட்டுவிட்டதாகவும் ஜெகநாதநாயுடு முதலியவர்கள் கதை கட்டி விடுகிறார்கள். அதுவே உண்மைபோலாகி, டாக்டர் ராமநாத முதலியாரும் வேலையிலிருந்து தள்ளப்பட்டுப்போகிறார்.

ஸ்ரீநிவாஸய்யர் :—"மிஸ்டர் தொண்டரடிப் பொடியவர்களுக்கு இந்த விஷயங்களை இவ்வளவு நிச்சயமாய்ச் சொல்ல என்னென்ன ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றனவோ—அவற்றை நான் பார்க்கலாமா?"

தொண்டரடிப்பொடி :—"ஸ்ரீநிவாஸப் பிள்ளையே இனி தன் குற்றங்களை மறைப்பதிற் பயனில்லை யென்று கருதி, தானே ஆஸ்பத்திரி சேவகனின் மனைவியை ஜெகநாதனின் விருப்பத்தின்படி சுட்டதாயும், ஆனால் தங்களின் நோக்கம் ஸஞ்சீவபாபுவின் யூகிப்பின்படி (பக்கம் 168-169) டாக்டர் ராமநாத முதலியாரைச் சுடவேண்டுமென்பதே யென்றும், குறி தவறி இப்படியானதென்றும், விஸ்தாரமாய் எழுதி இப்போது ஒரு கடிதம் ஸ்ரீநிவாஸப்பிள்ளை என்னிடம் தந்ததால், அந்த ஆதாரத்தின் மேல் இவ்வளவும் கூறினேன்." என்று அக்கடிதத்தை ஸ்ரீநிவாசய்யரிடம் தர, அவர் அதைப் பார்த்துவிட்டுக் கோர்ட்டில் தாக்கல் செய்தார்.

ஸ்ரீநிவாஸப்பிள்ளை கூப்பிடப்பட்டான்.

ஸ்ரீநிவாஸப்பிள்ளை :—"இனி என் தலை தப்புவது அபூர்வம் என்பது எனக்கு நன்கு தெரியும். அதற்கு வேண்டிய ஹேதுக்களையெல்லாம் ஸஞ்சீவபாபு பலமாகத் தேடிவைத்து என்னை அப்படி இப்படி அசையவோ தப்பித்துக் கொள்ளவோ முடியாதபடி செய்துவிட்டார். ஆகவே இனி நான் மூடி வைப்பதில் பயனில்லை

யென்று நான் செய்த கொலையைக் குறித்து தொண்டிரடிப்பொடியவர்களுக்கு ஒரு தனிக் கடிதத்தில் எழுதிக்கொடுத்துவிட்டேன். ஸஞ்சீவபாபுவின் ஊகிப்பின்படி ஜெகநாதநாயுடுதான் மூக்குத் தூளில் மயக்கப் பொடியைக் கலந்து தாமோதரம் ஐயங்காரைக் கொன்றூர். எதற்காகக் கொன்றூரென்பது ஸஞ்சீவபாபுவின் ஊகிப்புக் குறிப்பிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இப்படியே விஜயநாதனும் ரோயலைக் கைத் தடியால் அடித்துக்கொன்று, பின்பு அவனே எல்லோரையும் அனுப்பிவிட்டு, சமயபுரத்தில் கூரை வீட்டில் தற்கொலைக் காட்சியைத் தயார் செய்தான். இன்னும் பிரேமநாதனின் தமக்கையான லக்ஷ்மீகாந்தத்தின் 12-ஆயிரம் ரூபாய்களையும் விஜயநாதன் வகை மோசமாக அபகரித்துக் கொண்டான். அந்த 12-ஆயிரம் ரூபா நகைகளே ஜெகநாதனின் விவாகத்தின்போது கனகவல்லிக்குப் போடப்பட்டன்'' என்று மடமடவென வெறிகொண்டவன் போல் பேசுவதானான். (இத்தனை நாட்கழித்தேனும் அவனுடைய மனப்போக்கு மாறுகிறதற்கு கடவுளுக்கு நாம் வந்தனம் செய்யவேண்டும்.)

கோர்ட்டார் :— ஸ்ரீநிவாஸப்பிள்ளை, ஜெகநாத நாயுடு, விஜயநாதன் இம்மூவரும் துஷ்டர்களான தோழர்கள். ஒரு ஜதைக் கூட்டத்தார். மூவர் மீதும் கொலைக்குற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கேஸைத் தனிப்பட விசாரித்து முடிவு செய்கிறோம். இன்னும் ரங்கபாஷியம் நாயுடுவை நிரபராதி என்று சொல்லாமலிருப்பது நியாய மல்லவாதலால், ஜூரிகளின் அபிப்பிராயத்தையும் கலந்து கொண்டு அவரைக் கௌரவமாய் விடுதலை செய்கிறோம். ரங்கபாஷியம் நாயுடு இதுவரை கஷ்டத்தை அனுபவித்தாரானாலும், இனிமேல் இந்த "கஷ்டத்திற்குத் தக்க சுகம்" அனுபவித்து மனோரம்யமான வாழ்வில் அவர்விளங்குமாறு கடவுள் கிருபைசெய்யும்படி பிரார்த்திக்கிறோம்'' என்றுகோர்ட்டார்கூறினர். ரங்கபாஷியம் நாயுடுவும் விடுதலையடைந்தார். டாக்டர் ராமநாத முதலியார் நியாயாதிபதிக்குத் தமது வந்தனத்தைச் செலுத்தி ரங்கபாஷியம் நாயுடுவை மார்புறத் தழுவிக்கொண்டார். கோர்ட்டும் முடிவுபெற்றது.

---

மன்று. பார்த்தால் தெரியலாம். அநுபவத்தில் உணரலாம். கொடுமைக்குணம் மருந்துக்கும் அகப்படா. குடி முதலிய விஷயங்கள் தெரியாதவர். எங்கும் நல்ல ஸகவாசமே கொண்டவர்''— இவ்விதமெல்லாம் புகன்று தனலக்ஷ்மியைத் தன் வழிப்படுத்திய விஜயநாதன்—நிறைவேற்ற இயலாத ஒரு முக்கிய விஷயத்தைச் செய்தே தீர்க்கவேண்டு மென்றும், அஃதில்லாதபோது விவாகமே நடை பெறா தென்றும் ஏற்பட்டு விடுமாகில்— அவனுக்கு ஆயாசம் உண்டாக வேண்டியதும் நியாயந்தானே. இப்படி ஆயாசத்துடன் திகைத்ததற்குக் காரணம் ஜெகநாத நாயுடு முகம் கைகால்களும் நீங்கலாக தேக முற்றும் வெண் குஷ்ட ரோகியாதலின் விவாகத்தில் நலுங்கிடுதல், ஸ்நான முதலியவைகளைச் செய்தல் வேண்டி யிருப்பதால், அந்த சமயம் ஜெகநாத நாயுடுவின் ரோகம் வெளிப்பட்டு விடுமே யென்றும், பிறகு விவாகம் தடைபட்டுப் போனால் தனது இவ்வளவு பாடுகளும் வீணாய் விடுமே யென்றும் மதி கலங்குவதானான். இதையும் சரிப்படுத்தி விடலாமென்று விஜயநாதன் நினைத்தானது அந்த விவாகக் கூட்டத்தில் முடியவில்லை. வழி என்னவென்று யோசித்தான். இந்த வேடிக்கையான விவாகத்தைப் பார்க்கும்படி என்னையும் விஜயநாத ஜெகநாதர்கள் அழைத்து வந்திருந்தனர். என் மாமியான தனலக்ஷ்மி அம்மையைக் கண்குளிரத் தரிசித்தேன். நானும் அந்த அம்மையுமாக முன்பு காசி யாத்திரைக்குச் சென்றிருந்தபோது காசி க்ஷேத்திரத்தில் ஜனத்திரளினிடையே எவ்விதமோ பிரிந்துவிட்டோம். பிறகு ஒருவரையொருவர் காண்பதற்கு முடியாமலே போய்விட்டது. அதற்குப் பிறகு இப்பொழுதுதான் சந்தித்தேன். உடனே லக்ஷ்மீகாந்தத்தின் ஞாபகமும் என் நெஞ்சில் தோன்றி மிக்க வேதனை விளைத்ததால் துயரம் மேலிட்டு நின்றேன். ஆனால் என்னைக் காண்பித்துக் கொள்ளவில்லை. தனலக்ஷ்மி அம்மாளுக்கோ கண்கள் தெரியாதாதலின் என்னைக் கண்டுகொள்ள முடியவில்லை. கனகவல்லி யணிந்திருந்த பன்னீராயிரம் ரூபாய் பெறுமான நகைகளும்,

லக்ஷ்மீகாந்தத்தினுடையதென்று நான் கண்டுகொண்டபோது விஜயநாதனின் துரோகத்தை நினைத்துப் பற்களைக் கடித்தேன். ஆத்திரம் மேலிட்டுப் போனேன். ஆனால் நான் என்ன செய்ய முடியும்? ரகசியத்தில் மறைந்து நிற்கவேண்டியவன்: வெகு கஷ்டத்துடன் மனம் பொறுத்து நின்றேன். தனது குமாரத்தியான லக்ஷ்மீகாந்தத்தின் நகைகளென்று தனலக்ஷ்மி அம்மாள் கண்டு கொள்ள அப்போது கண்கள் தெரியாதானதால் முடியாமற் போயிற்று. அந்த சமயத்தில் விஜயநாதன் என்னை யணுகினான். நான் மிகுந்த கோபத்துடனும் அந்த நகைகள் என்னுடைய மனைவியினுடையதல்லவா வென்றேன். அவனுடைய சமயோசித சாதுர்யத்தை என்னென்பது? வெகு சாந்தமாக என் கோபத்தை யடக்கி, என்னையே ஜெகநாதநாயுடு என்று கூறிக் கொள்ளும்படியும், அந்த நகைகளோடு அந்தப் பெண்மணியை விவாகம் செய்துகொண்டு சுகித்திருவென்றும் கூறினான். எனக்கு அது பரம திருப்தியா யிருந்தது. கனகவல்லி ஒரு அயோக்கியனை, வெண் குஷ்டரோகியை மணப்பதற்குப் பதிலாக என்னைக் கொள்வது நலமென்று கருதிக்கொண்டு ஒப்பினேன். முகூர்த்தம் அதிகாலை மூன்று மணிக்கு நடந்தேறியது. எனக்கும் கனகவல்லிக்கும் விவாகமாயிற்று. குணசேகரத்தில் தானே சாந்தி முகூர்த்தமும் நடந்தேறியது. பள்ளியறையில் கனகவல்லியிடம் ஸகல விஷயங்களும் கூறி, உன் தமக்கையின் கணவனே நானென்றும், மறைந்து திரிய விதி வாய்த்திருப்பதில் இவ்விதம் உள்ளேயே அடைபட்டுக் கிடக்கிறேனென்றும், உன்னுடைய நகைகள் உன் தமக்கை லக்ஷ்மீகாந்தத்தினுடையதே யென்றும், ஆதலின் அவற்றைக் கூடியமட்டும் தனலக்ஷ்மி அம்மைக்குத் தெளிவுபடக் காட்டாதிருவென்றும், என்னைப் பற்றியும் ஒன்றும் அந்த அம்மையிடம் தெரிவியாது ரகசியத்தில் வைக்கும்படியும், ஜெகநாதநாயுடு துஷ்டனும் அலியுமானதால் வெளிப்பார்வைக்கு அவனை உன் கணவன்போல் காண்பித்துக்கொண்டு காலந் தள்ளும்படியும் தெளிவாய்க் கூறினேன். கனகவல்லி திகைத்துப் போனாள். தன்

தமக்கையின் கணவனென்று என்னை அறியப் பெரிதும் பிரமை கொண்டாள். தன் தாய்க்கு மட்டும் கொஞ்சம் தெரிவிப்ப தற்காக என்னை ரொம்பவும் வேண்டினாள். அதற்கு நான் உன் தாயாரிடத்தில் முன் கோபம் மிகுதியும் உண்டு. நானே லக்ஷ்மீகாந்தத்தைக் கொன்று இந்த நகைகளை அபகரித் திருப்பே னென்று எண்ணிவிட்டால் அதனால் உண்டாகும் தீங்கு பெரிதாகி விடும். விஷயம் வெளிப்பட்டுப்போம். லக்ஷ்மீகாந் தத்தை நான் கொன்று விட்டேனென்று என் மீது வாரண்டும் பல தடவை தோன்றியிருக்கிறது. நீ குலசேகரனுக்கு மனைவி யென்று வெளியில் காண்பித்துக் கொள்வாயானால், அதன் மூலமாக நான் மறைந்திருப்பது வெளியாகி, போலீஸார் வசம் சிக்கி லக்ஷ்மீகாந்தத்தைக் கொன்றவனாய் ஏற்பட்டு, ஒரு பாவமும் அறியாத நான் தூக்குமரத்திற்குப் போகநேரும். இது என் தலை விதி என்று அழுகையுடனும் கூறினேன். நீ ஜெகனாதநாயுடு வையே கணவன் என்று வெளியில் காண்பித்துக் கொண்டால் நான் மணியக்காரத் தெருவிலுள்ள வீட்டின் கொட்டடியிலேனும் அடைப்பட்டாவது உயிர் வாழலாமென்றேன். இவ்வாறாகக் கனகவல்லி என் க்ஷேமத்தை விரும்பி, நான் இருப்பது வெளியில் தெரியாதிருக்கவேண்டி, ஜெகநாதனைக் கணவன் என்று கூறும் படியாகப் பலவகையிலும் கட்டுப்படவேண்டியவளாய்ப் போனாள். வேறு வழியிற் செல்ல வகையுமில்லை, மீட்சியும் இல்லை. என் கோரிக்கையின்படியே கனகவல்லியும் தன் தயாருக்கு ஏதும் தெரிவியாமலே கடைசிவரையும் இருந்துவிட்டாள். லக்ஷ்மீ காந்தம் வந்து சேர்ந்த பிறகே விஷயமும் வெளிவரலானது. விஜயநாதனும் மகா தந்திரசாலி. லக்ஷ்மீகாந்தத்தின் கொலைக் கேஸில் நான் சிக்கி, அவனையே அடைக்கலமாக அடைந்து அவ னுடைய ஆதரவில் நான் மறைந்து நிற்பதால், என்னைக் கனக வல்லிக்குக் கணவனாக ஆக்கினால்; என் இக்கட்டுகளால் எதுவும் வெளிவருவதற்கு முடியாமல் தனது பாதுகாப்பிலேயே நான் இடப்பேனென்றும், என் சொற்படியே கனகமும் நடப்பாளென்

றும், தங்களின் மோசச் செயல்களைச் செய்ய சவுகரியப்படுமென்றும் விஜயநாதன் கருதி என்னைக் கனகவல்லிக்குப் புருஷனாக்கினான். விஜயநாதனின் கோரிக்கையின்படி கனகவல்லி வெளிக்கு ஜெகநாதநாயுடுவைத் தன் கணவனாகச் சொல்லிக்கொண்டாள். அதற்கு நானும் ஒப்பியிருந்தேன். குணசேகரத்தில் விவாகமான பிறகு திரிச்சினாப்பள்ளி வந்து சேர்ந்தோம், பிறகு ஒரு மாதம் சென்று ரங்கபாஷியம் முதலானோர் வந்து சேர்ந்தனர். கனகவல்லியின் விவாகத்தை யறிந்து ரங்கபாஷியம் வருத்தமடைந்தாரேனும், எல்லாம் தனது நண்பனான விஜயநாதனின் ஏற்பாடாதலின் அவன் நல்லது கருதியே செய்திருக்கவேண்டுமென்று திருப்திகொண்டார். ஜெகநாதநாயுடுவின் பிரபுத்வமும் ஆரவாரமும் வெகுபிரபலமா யிருந்தமையின் அத்தகைய ஐஸ்வரியவந்தனை கனகவல்லி மாலையிட்டதில் அவருக்கும் சந்தோஷமே எற்பட்டது. ரங்கபாஷியம் நாயுடுவும் தனலக்ஷ்மீ யம்மாளும் பந்துக்களை அழைக்காத காரணத்திற்காகப் பரிதாபத்துடனும் மன்னிப்பு கேட்டுக்கொண்டனர். எல்லாம் பெரியவீட்டுப் பிரஸ்தாபங்களானதால், அதை எதிர்ப்பார் எவருமின்றி, பணம் செய்கிற ஆரவாரத்தில் எல்லா குற்றங்களும் மூடப்பட்டுப்போய்—எல்லோரும் சரி-சரி என்று விட்டனர். பின்பு நாட்களும் சிறிது சிறிதாகச் செல்ல ஆரம்பித்தன.

மணியக்காரத்தெரு வீட்டில் நானும் கனகவல்லியுமாக வாழ்க்கை நிகழ்த்திக் கொண்டிருந்தோம். எங்களிருவருக்குமாக இரண்டு குமாரர்கள் பிறந்தனர். வெளியில் அவ்விருவரையும் ஜெகநாத நாயுடுவின் குழந்தைகள் என்று சொல்லும்படி விஜயநாதன் செய்தான். அக்குழந்தைகளும் என்னை இன்னானென்று அறியார். என் மறைவிடமும் தெரியா. அவர்கள் தூங்கிய பின்னரோ அவர்களை நான் காண்பது—முத்தமிடுவது. ஜெகநாத நாயுடுவையே தங்கள் பிதாவாகக் கருதி வந்தனர். எனக்கும் கனகவல்லியின் தாயாருக்கும் உள்ள பாந்தவ்யத்தையும் உறவையும் விஜயநாத—ஜெகநாதர்கள் அறியார். அதை அந்தரங்கமாகவே

வைத்து வந்தேன். கடைசியில், லக்ஷ்மீகாந்தமும் வந்துசேர, இரு ஸகோதரிகளும் ஒருவனையே பர்த்தாவாக அடைந்த விஷயத்தை மாமா வேணுகோபால் நாயுடு முதலியவர்கள் அறிவதாயினர். பிறகு ஒரு சமயம் நல்ல சந்தர்ப்பத்தில் வெளியிட்டுக் கொள்ளலாமென்று அவ்விஷயத்தை அவ்வளவுடன் ரகசியமாக வைத்துக் கொண்டோம். இன்று தங்களால் இவ்விஷயங்கள் யாவும் வெளிக்கு வருவதாயின"—என்று கூறி முடித்தார்.

ஸஞ்சீவ.—"கனகவல்லி எப்படி இன்னும் சுமங்கலியாயிருக்கிறாளென்ற பெரும் பிரசனையி லிருந்து, இவ்வளவு அந்தரங்கங்கள் வெளியில் வாரிக் கொட்டப் படுமென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. பிரேமநாதனது விவாகத்தின் ஸந்தோஷத்தைக் கனகவல்லியின் அமங்கலித்துவம் குறைத்துவிடுமே என்று மனஞ்சோர்ந்திருந்தேன். அப்பெருங் கவலை பகவத் ஸங்கல்பத்தால் நிவாரணமாய் விட்டது. குலசேகரருக்கு எப்போது க்ஷேம காலம் தோன்றிற்றோ அப்போது கனகவல்லிக்கும் மங்களம்தான். திண்ணைக்கு விடிந்தால் தாழ்வாரத்துக்கும் விடிந்து தானாகவேண்டும். ஜெகநாத நாயுடுவைச் சிறைச்சாலையில் அங்க பரிசோதிப்பில் அவன் அலி யென்றும் துஷ்டரோகி யென்றும் தெரியவர, நானும் அதை நேரிற் கண்டேன். அவ்வாறிருக்க—அவர் இரு குழந்தைகளுக்கும் தந்தையானது விசித்திரமாய் இருந்தது. பெரிய இடத்துப் பிரஸ்தாபங்களெல்லாம் இவ்விதம் இருப்பதும் இயல்பே. ஆஸ்திவந்தனை ஒருவர் தமது எழுபதாவது வயதில் புதிதாக மற்றொரு விவாகம் செய்து கொள்கிறார். அவரது ஜீவ ஸக்தி முற்றிலுமே ஒடுங்கிப்போ யிருப்பினும், புருஷ கோஷ்டியில் கடை வகுப்பில் கூட அவரைச் சேர்க்க முடியாதபடி யிருப்பினும், எவ்விதமோ அப் புது மனைவியும் இரண்டொரு குழந்தைகளுக்குத் தாயாகி விடுகிறாள். சொத்துக்கும் பாத்தியஸ்தர்களான குழந்தைகள் உண்டாகி விடுகிறார்கள். இதன் உள் விவரங்களையும், மர்மங்களையும் ஆராயின் ஆபாஸகரமாக வந்துமுடியும். ஜெகநாத நாயுடுவின் விஷயமும் இவ்வாறாகவே இருக்கவேண்டு

மென்று கருதி விஷயத்தை அவ்வளவுடனும் மூடிவிட்டேன். மணியக்காரத் தெருவில் நான் லக்ஷ்மீகாந்தம் காணமற்போன பிரஸ்தாபத்தை எடுத்துரைத்ததும் கனகவல்லி நடுங்கினாள். பின்பு அவ்வீட்டில் நான் பாராத அறையொன்றைத் திறப்பதற்குப் பிரயத்தனிக்கையில், கனகவல்லி அதைத் தடுத்து என்னை வேறு பேச்சுகளில் திருப்பினாள். ஏதோ மர்மம் ஒன்று இருக்கிற தென்று நினைத்துக்கொண்டேன். அந்த அறையில்தான் குல சேகரனும் இருந்து வந்திருக்கிறாரென்று இப்போது தெரிகிறது"- என்றார்.

வேணுகோபால் நாயுடு ஸகலமும் குலசேகரனே தெரிவிக் கட்டுமென்று தாம் மௌனமாய் இருந்தாகக் கூறினார்.

குலசேகரன்.—"இதில் எனக்கு ஒரு சந்தேகம். ஜெகநாத நாயுடுவுக்கும் கனகவல்லிக்கும்—கோர்ட்டு வரைக்கும் ஏறிய—அத் துணைக் கடும் மனஸ்தாபம் உண்டாகியிருந்தும், ஜெகநாத நாயுடு கனகவல்லியின் யதார்த்த நாயகன் இன்ன இடத்தில் இருக்கிறா னென்று கூறி, என்னை வெளிப்படுத்தி எனக்குத் தண்டனையும் கிடைக்க வைத்து, கனகவல்லியின் மீது இருந்த துவேஷத்தை என்னிடம் நன்றாகக் காண்பித்துக் கொள்ளலாமே. லக்ஷ்மீகாந் தத்தைக் கொன்று நகைகளை அபகரித்த கேஸுக்காக நானும் குற்றவாளியாகலாமே? அப்படி என்னைக் காட்டிக் கொடாமல் ஏன் சும்மா இருந்துவிட்டார்?"

ஸஞ்சீவ.—"ஜெகநாத நாயுடு அப்படி இளிச்சவாய்த் தம்பிரா னல்ல. அவசியம் காட்டிக்கொடுத்தே இருப்பார். ஆனால் அதி லிருந்து, தான் ஆள் மாறட்டமாய் மோசவிவாகம் செய்த சங்கதி கள் வெளிக்கு வந்து விடுமானதால், அதற்காக வருஷக் கணக் கான தண்டனை தமக்கு ஏற்பட்டுவிடக் கூடுமானதால்—உம்மைக் காட்டிக்கொடுப்பதிலிருந்தும் அவர் தானே பலவந்தமாக அகப் பட்டுக் கொள்வதால்—இதையெல்லாம் தீர்க்கமாய் யோசித்துத் தான் அவர் மௌனமாகக் கடைசி வரையும் இருந்து விட்டா ரென்று சொல்லவேண்டும்" என்பதாகத் தெரிவித்தார்.

இவ்வளவு பிரஸ்தாபங்களும், நடந்தேறிய பின்னர் நலுங்கு வைத்தலும் கிரமமாகச் செய்யப்பட்டன.

இந்த இடத்தில் வாசகர்களுக்கு ஒரு குறிப்பு உணர்த்த விரும்புகிறோம். 277-பக்கத்திலிருந்து 285-ம் பக்கம் வரையிலும் வருகிற கனகவல்லி—லக்ஷ்மீகாந்தம்—இவ்விருவரது ஸம்பாஷணைகளையும் மற்றொருமுறை படித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது முன்புபொருத்தமற்றதாகத் தோன்றிய கனகவல்லியின் பேச்சுகள் இப்போது ஒப்பும்படியானதா யிருப்பதைக் காணலாம். ஜெகதநாயுடுவை ஏன் விரோதித்தா ளென்பதும் தெரியும்.

மறுநாட் காலையில் பிரேமநாதனுக்கு விவாகம்! இக்காலத்தில் விவாகமென்பதற்கு அவரவருடைய மனோ தருமம்போல் பல அர்த்தங்கள் வலுத்துக் காணுகின்றன. கல்யாணப் பெண்ணுக்கோ, குழந்தையாதலால் புதுப்புடவை, நகைநட்டுகள், மேள தாளங்கள், நலங்கு, ஊஞ்சல், சம்பிரமமான சாப்பாடு, பல்லக்குச் சவாரி முதலிய தமாஷ் மட்டும்தான் விளங்குவது. விவாகத்தை நடத்துபவருக்கோ இது தன் திரவியத்தைத் தொலைக்க வந்ததோர் தலைவிதி. ஊர் சிரிக்காம லிருக்க வேண்டித் தன் யோக்கியதையை அநுசரித்தோ அல்லது மீறியோ செலவுசெய்து நடத்தித் தீரவேண்டிய கடன். மாப்பிள்ளை வீட்டுக்காரருக்கு, இது பெண்வீட்டுக்காரராகிய சம்பந்திகளைப் பலவகையானும் உபத்திரவித்து, அவர் உடைமையை எவ்வளவிற்கு அபகரித்துப் பாழாக்கலாமோ அதற்கும், அவர் மூலமாகத் தாம் எவ்வளவு உபசாரம் பெறலாமோ, எவ்வளவுதின்றுத்தெறிக்கலாமோ, அவர்களை எவ்வளவிற்குத் தூஷிக்கலாமோ, அதற்கும்—நன்றாய் ஏற்ற சந்தர்ப்பம். புரோகிதருக்கு இது பலவிதமாகவும் லாபத்தைத் தரும் சமயம். சாப்பாடு, தக்ஷிணை இரண்டும் சம்பிரமமாய் நடக்கும். ஆனால் இதில் சம்பந்தப்பட்ட ஒரு பிராணிக்காவது இது புண்ணிய கரும மென்று படுவதில்லை. இச் சந்தர்ப்பத்தில் கோஷமாகச் சொல்லும் மந்திரங்கள் என்னவென்றாவது, அவைகளுக்கு ஏதாகிலும் அர்த்தமுண்டாவென்றாவது யாருக்கும் கவனம் போவ

தில்லே. விவாக பார்தவ்வியம் என்பது அக்கினி சாக்ஷியாக வித்துவான்கள் கூடிய சபையில், தம்பதிகள் செய்துகொண்ட ஒப்பந்தமென்றும், அதை மாற்ற முடியாதென்றும், ஆதலால் அதற்கு விரோதம் நடப்பது கூடாதென்றும், யாருக்கும் காணுவதில்லே. ஏதோ நமது ஜாதியில் ஏற்பட்ட வழக்கப்படி வேஷம் போட்டு நடித்து விட்டால், அவ்வாறு நடித்த பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஒரு உறவின்முறை யேற்பட்டு விடுவதாக ஜனங்கள் ஒப்பி யிருப்பதை அனுசரித்து, உலகஞ் சிரிக்காமல் ஒப்புக்கு மாரடிப்பதுமாக இப்படியாய்விட்டது நமது பிழைப்பு! விவாகமென்பது ஆத்துமா புனிதமாவதற்கு அவசியமாக வேண்டிய ஒரு தருமம்.

மனிதர்களில் ஆணும் பெண்ணும் விவாக மூலமாகச் சேருவது 'இரண்டு நாளைச் சுற்றம்' மட்டுமல்ல வென்றும், ஒருமுறை முடி போட்டால்—அதனாலுண்டாகும் பாந்தவ்யம் சாஸ்வதமாகி, என்னும் நீங்காமல் கூடிவந்து, பரஸ்பரம் உபகாரமாகிக் கடைசியில் பிரம்மானந்த அவஸ்தையில்—நீ—நான் என்னும் பேதம் நசித்துப் பரமாத்மாவுடன் சாயுச்சியபதவி யடையும் வரை நடக்க வேண்டிய காரியம் என்றும் விவேகிகளின் துணிபு. இந்த லக்ஷியத்தை முக்கியமாகக் கொண்டுதான் கோடிக்கணக்கான ஜனங்கள் இந்தியாவில் ஆசரித்து வருகின்றனர்.

இத்துணை உன்னதமும் உயர்நலஞ் சார்ந்ததுமான விவாக முகூர்த்த தினமும் வந்தது. சுபலக்கினத்தில் நமது பிரேமநாதனுக்கும் சௌபாக்யவதி இராஜம்மாளுக்கும் விவாகம் மிக்க வைபவமாக நடந்தேறியது. மூன்றாம்நாள் இரவு சாந்தி விசேஷங்களும் பூர்த்தியாயின. ஸஞ்சீவபாபுவும், டாக்டர் ராமநாத முதலியாரும், பால்யநேசனானஜெகநாதனும்,பிரேமநாதனின் லண்டன்மாநகரத்து நண்பர்களும், பந்து ஜனங்களும் ஏராளமான சீர் வரிசைகள் செய்தனர். ரங்கபாஷியம் நாயுடுவின் நெடுநாளைய மனோரதமும் நிறைவேறிற்று. அவருக்கும் "மனோதிருப்தி" உண்டானது. விவாகத்தின் பயன் மனோ திருப்திதான். அந்த திருப்தியால்

விவாகமாவதற்கு முன்னர் இளைத்து நின்றவன்—அவ்விவாக காரணமாகப் புஷ்டித்துப் பூரித்து உருவமே தெரியாமல் மாறிப்போகின்றான். மனோதிருப்தி மட்டும் உலக வாழ்க்கையில் ஒருவனுக்குக் கிடைக்குமாயின் அதனினும் பெரிதான பாக்கியம் ஞாலமீது வேறுளதோ? இவ்வளவுதூரம் பிரேமநாதனின் கதையை வாசித்த நமது நேயர்களும்கூட, இப்போதுதான்—இந்த அத்தியாயத்தால் தான்—மனோதிருப்தி அடைவதாயினர். கடவுள் கருணைபாலித்து அருளிய வரங்களுள் மனோதிருப்தியே முதன்மை பெற்றதாமெனக.

---

# அத்தியாயம்—19

## ஸம்பூர்ணம்

ஆயிற்று!—என்று தொடங்கிய நம் பிரேமநாதனின் கதையும் இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இப்போது மங்களமான முடிவுக்கு ஸமீபித்திருக்கின்றது. பிரேமநாதன் லண்டன் மாநகரில் நடாத்தும் ஆநந்தா பத்திரிகை முன்னிலும் அதிக வியாபகமாய் நன்கு நடைபெற்று வருகின்றது. மூன்று மாதங்களுக்கு ஒருதடவை பிரேமநாதன் லண்டனுக்குச் சென்று சில வாரங்கள் தாமதித்துத் திரும்புவதை வழக்கமாகக் கொண்டார். ஸஞ்சீவபாபு கல்கத்தாவுக்கும் திருச்சிக்குமாக உலாவியபடி இருக்கின்றார். சுப்பம்மாளிடத்து அவருக்கு இருந்த விஸ்வாஸம் இன்னும் வளர்ந்து கொண்டே வருகிறது. டாக்டர் ராமநாத முதலியாருக்கும் ரங்கபாஷியத்துக்கும் உள்ள நட்பு நாளுக்கு நாள் பெருகிவருகின்றது. அவ்விதமே ச. கோ. ஜகநாதனுக்கும் பிரேமநாதனுக்கும் உள்ள

பால்ய நேசமும் தினேதினே வளர்ந்தபடியே இருக்கின்றது. ச. கோ. ஜெகநாதனின் வீட்டைக் கனகவல்லி அவனுக்குத் திரும்பவும் கொடுத்து அவ்வீட்டில் அவன் வசித்துக்கொள்ளும்படி செய்தாள். ஜெகநாதனும் அவன் அன்னேயும் க்ஷேமமே.

குலசேகரன் தனக்குத் தஞ்சாவூரில் உள்ள பூஸ்திதிகளைப் பெற்று தனது இருப்பிடத்தைத் திருச்சியிலேயே வைத்துக் கொண்டு கனகவல்லி, லக்ஷ்மீகாந்தம் இவர்களோடு ஆநந்தமாயிருக்கிருன். விஜயநாதனின் மனைவி லக்ஷ்மீகாந்தத்தினிடமே தனது வாணுட்களைக் கழிப்பதென்ற தீர்மானத்தோடு இருந்தனவாதலின், ரங்கபாஷியம் நாயுடு அவள் பிரியப்படி லக்ஷ்மீகாந்தத்தினிடமே இருக்கும்படி செய்தார்.

இராஜம்மாளுக்கு சீமந்தம் வெகு நன்ருக நடந்தேறிற்று. பத்தாவது மாதத்தில் பாலசூரியனைப்போல ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்தாள். ஜெனகலக்ஷ்மிக்கும் இவ்வளவு வருஷங்களுக்குப் பிறகு ஒரு புத்திரபாக்கியம் உண்டாகி, அக்குழந்தையோடும் அவ்வநிதாமணியின் காலம் இனிமையாய்க் கழிகின்றது. லக்ஷ்மீகாந்தமும் இப்போது பூரண கர்ப்பமாக இருக்கின்ருள். வேணுகோபால் நாயுடு அனைவருக்கும் ஒரு திலகமாய் சுண்ணும்புகாரத் தெருவுக்கு ஒருசோபிதம் தந்துகொண்டு ஒளிர்கின்ருர். டாக்டர் ராமநாத முதலியார் மீண்டும் தமது உத்தியோகத்தை அடையப் பெற்று, தர்ம மார்க்க தரிசியாய் பரோபகாரியாய் வாழ்ந்து வருகிருர்.

ஸ்ரீரங்கத்தில் இதுகாறும் மொட்டைக்கோபுரம் என்று சொல்லப்பட்டு வந்த பாதி கட்டிடமான ராயகோபுரத்தைப் பிரேமநாதன் முற்றிலும்கட்டிமுடித்துவிட்டதால், அது இப்போது மொட்டைக்கோபுரம் என்றபெயரிலிருந்து நீங்கி, மற்றக் கோபுரங்களைப்போல் உச்சியில்சிகரங்கள் உள்ளதாய்ப்பெரிய கோபுரமாகப் பிரகாசிக்கின்றது. பிரேமநாதன் கதையை எவரேனும் பொய்க் கதை என்று கருதுவாராகில், ராயகோபுரத்தின் மேல் புதிதாக அவனல் எழுப்பப்பெற்ற சிகரங்களோடு கூடிய பூர்த்தியான

கோபுரத்தைக் கண்ட பிறகாவது இக்கதையின் யதார்த்தத்தை நம்பக்கடவாராக. இப்போது ஸ்ரீரங்கத்து ராயகோபுரத்துக்கு— மேல் சிகரங்கள் இருப்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மையே இக்கதையும்.

பிரேமநாதனும் இராஜம்மாளும் அளப்பரிய காதலுடனும் தமது இல்வாழ்க்கையை நடப்பித்துக்கொண்டு புத்திரபாக்கியங்களோடு பகவத்தியானத்துடனும் ஸந்தோஷமா யிருக்கின்றார்கள். பிரேம—ராஜ தம்பதிகளிடமிருந்து நாம் விடைபெற்றுக்கொள்கின்றோம். அவர்களின் மனோகரமான சரிதை இத்துடனும் "ஸம்பூர்ணம்" பெறுகின்றது. பகவான் எல்லோருக்கும் மங்களத்தைச் செய்வாராக. நல்லோர் முடிவில் நன்மையையே கண்டடைவார்கள். சுபம். 18-3-18.

பிரேமநாதன் முற்றிற்று.

# நட்பு

## அதன் எதார்த்தமும், போலியும்.

உனைமுகஸ் துதிசெயும் ஒருவனும் துன்புநீ
உற்றுழி உதவிசெய் உறவினன் ஆகான்.
வாய்வரும் வார்த்தை வாயுவின் எளிதே.
உற்றநண் பரைக்கண் ணுறல் தான் அரிது.
விரயம் செய்ய திரவியம் உளவரை,
நினக்கோவ் வொருவனும் நேயனாய் இருப்பன்.
உறுநிதி மட்டும் குறைவுறு மாயின்,
நினது குறையினை நிரப்பிடான் எவனும்.
ஊதாரி யாக ஒருவன் உளனேல்,
"இவனோர் அரசனாய் இராததேன் ? பாவம்!" என்
றித்தகை இச்சகம் இயம்பி, அவனை,
'உதார குணம்படைத் துள்ளவன்' என்பர்.
ஆயினும், திருமகள் அருள் ஒரு தடவை
போய் விடின், அவன் நற்புகழும் போய்விடும்.
முன்னம் அவனை முகஸ்துதி செய்தோர்,
அவன் கூட்டுறவினை அற இனி ஒழிப்பர்.
உண்மையில் நினதுமெய்ந் நண்பன் நினக்கு நீ
துன்புறுங் காலையில் துணைபுரிந் திடுவன்.
நீகவல் கையில்கண் ணீர்விட் டழுவன்.
நித்திரை யேகோளான், நீவிழித் திருப்பின்.
இவ்விதம் மனத்துறும் ஒவ்வொரு துயரிலும்,
அவனும் நின்னோடு அடைவன் ஓர் பங்கு.
அகநட் பையும்முகம் நகமொழி பகையையும்
அறிதற் காகுநல் அறிகுறி இவையே.

[இது Barnfield என்ற ஆங்கிலப்புலவர் இயற்றிய "Everyman that flatters thee &c" என்பதன் தமிழ் மொழி பெயர்ப்பு. பிரம்மஸ்ரீ பண்டித ம. கோபாலகிருஷ்ணைய ரவர்கள் இசைத்தது.]

# ஆசையின் எல்லை

ஒரு இராஜ மைந்தனும் ஒரு இராஜபுத்திரியும்
ஆசையினால் மனமொருமித்து ஸதிபதிகளாகி,
பிறகு அவ்வாசையினாலேயே பிரிக்கப்பட்ட
விநோதம்.

கதாசாரம்

ஆசைகள்மூன் றதனில், மண்பொன் னெனுமிரண்டும்
புறத்தாசை, ஐம்பு லாதி
பாசபந்த முறச்செயும் பெண்ணாசை யொன்றே
அகத்தாசை படிமீ தென்பர்.
நேசமும்கற் பும்வுளவோர் மனைவியை ஆடவன்
வெறுத்து நிந்தித் தோட்டி
நாசமுறச் செய்வதும் அவ்வாசை யென்றே
காட்டினதோர் நடத்தை யன்றே !

ஒப்பற்ற அழகுள்ள ஓர் இராசகுமாரனானவன் உலகத்தில் எவ்வளவு கலைஞானங்கள் உண்டோ, அவ்வளவு சாஸ்திரங்களையும் படித்துணர்ந்தவனா யிருந்தான். படித்த சர்வ சாஸ்திரங்களிலும் பெண்ணாசைக்கு மிஞ்சினது யாதொன்றுமில்லை என்று சொல்லிவந்ததால், அது எப்படிப்

பட்டதாயிருக்குமோ வென்று யோசித்திருக்கையில்; இவனுக்குப் பருவகாலம் நெருங்கவும், அவன் தாய்தந்தையர் மணம்செய்யும் படி நிச்சயித்தனர். இதைக் கேட்ட இளைஞன் நமக்கு எந்தப் பெண்ணையோ கொண்டுவந்து மணஞ்செய்து விடுவார்கள். அதனால் அவளிடத்தில் நமக்கு என்ன இன்பமுண்டாகும்? சாஸ்திரத்திலே காந்தர்வமணந்தான் (அதாவது ஒரு வாலிபனும் ஒரு ஸ்திரீயும், தனக்குத்தானே இஷ்டப்படுகிறது என்கிற) இந்தச் சேர்க்கைதான் சரியான சம்பந்தம், இன்பம், சமேதம் என்றிருக்கிறது, ஆகவே, நான் பார்த்து இஷ்டப்பட்டும், என்னை ஒருத்தி பார்த்து அவள் மனம் என் மேல் முழுதும் தாவி இஷ்டப்பட்டும் உண்டாகிற ஒரு சம்பந்தத்தைத்தான் நான் தேடிக்கொள்ள வேணுமென்று தனக்குள் யூகித்து, வெளியே புறப்பட்டு விட்டான். இவன் ஊரூராய் தன் மனதை மயக்கி இழுக்கத்தக்க சுந்தரம் வாய்ந்தவள் எங்கு கிடைப்பாள் என்று தேடி நாடி வரும்போது, வெகு தூரத்திலுள்ள இன்னொரு ராஜ்ஜியத்தின் அரசபுத்திரியொருத்தி, தேவஸ்திரீகளும் இவளழகைக் கண்டு வெட்கி ஓடிப் போகத்தக்க கட்டழகும், அதோடுகூட சரஸ்வதிக்கொப்பான கல்வியழகும் பெற்றவளாயிருந்தாள். அவள் கற்றுத்தெரிந்த சாஸ்திரங்களனைத்திலும் உலகத்திலுள்ள மூன்றாசைகளில் பெண்ணாசையே பெரிது பெரிது என்று ஆண்மக்களுக்குச்சொல்லியிருக்கிறார்களே! அப்படியானால் பெண்களுக்கு எந்த ஆசை பெரிது? ஆண்களுக்கு ஆசை தீர்க்கத்தான் பெண்களைப் படைத்திருக்கிறது. பெண்களுக்கு ஆசை தீர்க்க யாரைப் படைத்திருக்கிறது? ஆண்களுக்கு மாத்திரந்தானா ஆசை? பெண்களுக்கில்லையா? சீச்சீ, கல்வி சாஸ்திரிகளெல்லாம் ஒருதலைப் பக்ஷத்தார்கள் என்று நெடிய ஆலோசனையி லிறங்கி, அவ்வாலோசனையை சிந்தித்துக்கொண்டே ஒருநாள் மாலை, தன் உப்பரிக்கையின் மேல் உலாவி இருந்தாள். அந்நேரத்தில் இராஜமைந்தன் தன் குதிரையை விட்டுக்கொண்டு அவ்வுப்பரிக்கையின் ஓரமாய்ப்போக, அதை இவள் எட்டிப் பார்த்தவுடனே இவள் இரு கண்களானதும்

ஒரு அம்பைப்போல் இவன் மனதில் தைக்க, உடனே இவன் மதிமயங்கி குதிரையோடு சாய்ந்துவிட, ஆ! இளஞ்சிங்கத்தைப் போன்ற இப்படிப்பட்ட அரசன் என்னால் மூர்ச்சித்தனனே என்ற ஓர் இரக்கம் இவளுக்கு எழும்ப, அதே காரணமாக இவள் தேகமுழுவதும் ஒருவித அனல் கிளம்பி காமாந்தகாரம் கண்களைக் கப்பிக்கொள்ள, கால்கள் பின்னலிட தானும் நிலை தளர்ந்தனள். சற்றுநேரம் தணிந்து நிலைவரப்பட்டெழுந்த பின் இவளிரக்க மானது விடாமல் இவனைப் பார்த்துப் பார்த்து ஆலோசிக்கிருள். இவர் இப்படி மூர்ச்சை தெளியாமல் விழுந்து கிடப்பதற்குக் காரணம் நாமே. இதற்காகத்தான் நம்மை ஆசை யென்று சாஸ் திரிகள் சொன்னது. அப்படியானல் ஆசையாகிய நமக்கு இன் னெரு ஆசை யேது? நாம் ஆண்மக்கள் மீது வைக்கிற இரக்கமே நமது ஆசை. நாம் மனம் வைத்து இரக்கங்காட்டாமல் போனல் நம்மேல் அவர்கள் கைபோடக்கூடாது. தூரத்தில் நின்று கண் போடத்தானும் கூடாது. ஆகவே, ஆசையாகிய பெண்களுக்கு அந்நேரத்திலுண்டாகும் இரக்கமே ஆசையென்று இப்போது தெரிந்துகொண்டேன். இனி இவ்வரசன் போகும் கதியென்ன? நம்மால் வதைகிறரே என்று பறபறப்பாக உப்பரிக்கையைவிட்டுக் கீழே யிறங்கி தன் மிருதுவான கரங்களால் அவனைத் தொட்டாள். தொட்ட அந்த ஸ்பரிசமானது அவன் களையைத் தீர்க்கும் சஞ்சீ வியைப்போலாகி கண்விழித்துப் பார்த்து, சொல்லக்கூடாத மகிழ்ச்சியடைந்து தான் என்ன சொல்வதென்று தனக்கே தெரி யாமல், தான் கற்ற கல்வியிலுள்ள சகல வர்ணனையுங் கொண்டு, பெண்ணே, கண்ணே, நிலவே, நட்சத்திரமே, பொன்னே, தங்கமே, பூவே, கரும்பே, பாகே, சுவையே, கிளியே, அன்னமே, அருமருந்தே என்று என்னென்னவோ பிதற்றினன்; இவளும் துரையே, இறையே, அன்பே, ஆசையே என்று கூறி ஒருவரோ டொருவர் முத்தமிட்டுக்கொண்டனர்கள். அப்பால் இவர்களுடைய ரகசியங்களை வெளியாக்கிக்கொண்டபின், இராசகுமாரன் காந் தர்வ மணந்தான் நாம் செய்துகொள்ளவேணுமென்று வாதிக்க;

இராஜ புத்திரி ஆம், இப்போது நாமிருவர்களும் மனமொத்துக் கொண்டதே காந்தர்வ மணமாய்விட்டது. ஆனல் உலக ஒப்பனைக்கு பிராஜாபத்திய மணம் (அதாவது மணமகன் மணமகளுடைய தாய் தகப்பன் சுற்றத்தார் இஷ்டப்பட்டு கலியாணஞ்செய்கிற மணம்) வேணுமே என்று வாதித்தாள். இவன் பிராஜாபத்திய மணத்தினுலே பொருத்தமில்லாமல் போய்விடுமே, நீயும் நானும் பொருந்துவதற்கு சுற்றத்தார்களுடைய இஷ்டம் வேண்டுமென்பதென்ன? அது ஒரு பயம் தரும் கட்டே அன்றி வேறல்ல என்று நியாயங் காட்டினன். இவளும் யோசித்து; ஆம் புருஷனுவது பெண்ணுவது மனம் வெறுத்துப்போனல், சுற்றத்தார்களுடைய கட்டுப்பாடாகிய பிராஜாபத்திய மணம் என்ன செய்யப் போகிறது! எல்லாம் நமக்குள்ள ஆசையின் காரணந்தானே. அதுவுமன்றி இப்போது, இம்மன்னனைத்தான் நான் மணஞ் செய்து கொள்ளப்போகிறேன் என்று என் தகப்பனுக்குத் தெரிவித்தால், ஆ! அவ்வளவு ஆங்காரமா இச்சிறுக்கிக்கு: நாமிருக்க, நாம் பார்த்துத் தேடிவைக்க, அதைவிட்டு இவளிஷ்டமாய் மாப்பிள்ளை சம்பாதித்தாள் பார்த்தாயா! இவள் மனம் போலா விடுகிறது? என்று மாறுயோசனை செய்தாலும் செய்வார்கள். இதன் நடுவில் எத்தனை கலக்கம் உண்டானுலும் உண்டாகக்கூடும் என்று பலவாறு சிந்தித்து, திடங்கொண்டு மன்னனுக்குச்சொல்லுகிருள்; அன்பரே! இன்று நீர் மனங்கொண்டபடி நமது இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்; இதுவே காந்தர்வமணமாய் விட்டது. மறுநாளே உமது தகப்பனுக்கும் என் தகப்பனுக்கும் இது சேதி தெரிவித்து உலக நிந்தை ஒழிய ஒப்புக்குக் கலியாணம் செய்யவேணும். நாம் கூடிக்கலந்த பின்பு நம்மைப் பிரிக்க அவர்களால் முடியாதல்லவா? எப்படியாவது இசைந்து செய்து விடுவார்கள். இதுவே நல்ல யுக்தி என்ன, அவன் ஆசையின் ஆத்திரமானது அதற்கு சம்மதிக்க, (இவள் படித்தறிந்தவளானதால் ஆசையினுடைய எல்லை இவ்வளவு நாளிருக்குமென்று தெரிந்திருந்ததினுலே) என் காதலனே! இன்று நான் உனக்கு

அடியாளாய் விடுகிறேன், நான் பெண் ஜன்மம், இதோடு கெட்டேன் ; என்னை நீர் மோசஞ்செய்யாதிருக்க ஒரு சத்தியம் செய்து கொடுக்கவேண்டுமென்றனள். (வைத்தியன் மருந்து கொடுப்பதற்கு முன்னும், வாத்தியார் ரகசியம் கற்றுக்கொடுப்பதற்கு முன்னும், லாயர் வழக்குத் தொடுப்பதற்கு முன்னும், ஸ்திரீகள் கற்பைக் கொடுப்பதற்கு முன்னும் தங்களுக்கு வேண்டியதைக் கேட்டடைந்து கொள்ளாமற் போனால் அப்பால் கிடைப்பது கஷ்டம் என்று அவளுக்குத் தெரியுமாதலால், இவ்வண்ணம் சத்தியம் கேட்டாள்.) அரசன் என்ன சத்தியம் செய்துகொடுக்க என்றான். தெய்வத்தின் மீது, பசு மீது, பச்சைமரத்தின் மீது, என் தலைமீது அடிக்கிற சத்தியமெல்லாம் உதவாது. அது பிரயோஜனமில்லை ; இப்போது என் மேல் நீர் கொண்டிருக்கிற ஆசையின் மீது மாத்திரம் சத்தியம் செய் என்ன ; அரசனும், ஆசையின்மீது சத்தியம் என்று மும்முறைசொல்ல, பிறகு கூடிக்கலந்து மனரம்மியமடைந்து மற்றநாளே இது சங்கதி தங்கள் தகப்பன்மாருக்குத் தெரிவிக்க, அவர்கள் ஆச்சரியமடைந்து, நடந்துபோன காரியத்திற்கென்ன செய்கிறதென்று சம்மதித்து மிக்க சிறப்பாகக் கலியாணமும் கட்டித்தீர்த்து இவர்களுடைய வாழ்க்கைக்குத் தனியிடம் கொடுத்தனர்கள். இவர்கள் அங்கு சேர்ந்து யதேச்சையா யிருப்பதில் தங்களிஷ்டம்போல இன்பம் நுகர்ந்து வருங்கால் மூன்று மாதங் கழிந்தது. நாயகிக்கு வயிற்றில் கர்ப்பந் தரித்தது. தலை சுழற்றல், குமட்டல், அரோசிகம், மயக்கம் உண்டானது. முகம் தளர்ந்தது ; பெண்ணுறையின் முடிவு அவ்வளவுதான் ; புருஷன் இவளைப் பார்த்தான், அவள்மேல் ஒருவித மான வெறுப்புத் தோன்றினது. இதைத் தானா பெண்ணாசை வெகு பெரிதென்று கலைவல்லோர் சொன்னார்கள்? என்று துக்கித்தான். அவள் கிட்டே போக அசங்கிதப்பட்டான். நாயகி படித்தவள் ; இதைத் தெரிந்து கொண்டாள். இனி என்ன ஆசையைக் காட்டுவாள்? கொஞ்சங்கொஞ்சமாய் அருகே நெருங்கினாள். இவனுக்கோ முழு வெறுப்புண்டானது. அந்த வெறுப்பின் மீது.

பெண்ணே! ஆசை அறுபதுநாள், பிரியா
மோகம் முப்பதுநாள்,
தோண்ணூ றும்போ யின பின்பு, துடைப்பக்
கட்டை யானவுன்னை
விண்ணே! மதியே! தாரகையே! மின்னற்
கொடியே! நீத்திலமே!
கண்ணே! மணியே! மயில்குயிலே! கரும்பே
என்றேன் மடத்தனத்தால்

என்று சொல்லி இவன் நிராகரிக்கப் பார்த்ததில், இவள் அரசே! என் தேகத்தைப் பற்றி உமக்கு அக்கறையற்றபோதிலும், நீர் ஆசையின்மேல், இட்ட சத்தியத்தை நினைவு கூறும் என்று சொல்ல, அந்த ஆசையென்பது வேறெது என்ன, இவள் அதைக் காட்டுகிறேன், காட்டுகிறேன் என்று தவணையிட்டுக்கொண்டு வந்து, தன் போதுகாலம் நெருங்கி அற்புத ஸ்வரூபமான ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றெடுத்துக்கொண்டு தன் நாயகனை அழைத்து ஆசையைக் காட்டுகிறேன் வாவென, ஓர் கிணற்றண்டை கொண்டு போய் நிறுத்தி, பிள்ளையை நோக்கிச் சொல்லுகிறாள் ;

அரும்பால கா, முனம் பூமணம்,
சொற்பொருள், ஆகமுயிர்,
கரும்பாஞ் சுவை, யெள்ளு மெண்ணெயைப்
போலுற்ற காதலனைப்
பெரும்பாலி லன்னம் அமிர்தமும் நீரும்
பிரிப் பதுபோல்,
சுரும்பாம்,புலவர், எமன், ஆலை,ச்
செக்கெனத் தோன்றினையே

என்ற பாட்டைச் சொல்லி; (அதாவது பாலகனே, உன்னைக் கர்ப் பந்தரிக்கா முன்னே, என் புருஷனும் நானும், பூவிலே மணமும் சொல்லிலே பொருளும், தேகத்தில் உயிரும், கரும்பில் சுவையும், எள்ளில் எண்ணெயும் சேர்ந்திருப்பதுபோலக் கலந்திருந்தோம் ;

நீயோ, பூவிலே மணத்தைப் பிரிக்கும், வண்டாகவும், சொல்லிலே பொருளைப் பிரிக்கும் புலவனாகவும், தேகத்திலே உயிரைப் பிரிக்கும் எமனாகவும், கரும்பிலே சுவையைப் பிரிக்கும் ஆலையாகவும், எள்ளிலே எண்ணெயைப் பிரிக்கும் செக்காகவும்—இதுகள்போலத்தோன்றி எங்கள் ஆசையைப் பிரித்துவிட்டாய். அந்தப் பிரிந்த ஆசை நீ தான் என்று சொல்லி, மன்னனைப் பார்த்து, நாயகா, இதோ நீ சத்தியஞ் செய்த ஆசை இதுதான். உலகத்திலே ஸ்திரீ புருஷாள் எப்படியாவது ஒரு பிள்ளை பெற்றுக்கொள்ள வேணுமென்று ஆசை கொள்ளுகிறார்கள். அந்தப் பிள்ளை ஆசை ஸ்திரீ புருஷ சமேத ஆசையை வெட்டிவிடுகிறது. பிரசவ வைராக்கியம் என்பது ஒன்று உண்டுதான். அதாவது ஸ்திரீ பிள்ளைபெறும் அவஸ்தையில் புருஷனே வேண்டாம் சீச்சீ என்கிறது. பிள்ளை பிறந்த ஐந்து நிமிஷத்துள் புருஷனை நினைவு கொள்ளுகிறது. ஆனல் புருஷனே வெறுப்பு கொண்டால் பெண் என்ன செய்வாள்? ஸ்திரீகளின் லகுபிகுவெல்லாம் முதலிலேயே; பின்னுலெல்லாம் புருஷனுடைய பிகுவு தான். ஆனது கொண்டே அந்நாளில் உமது ஆசையின்மேல் சத்தியம் வாங்கிக்கொண்டேன். இதோ அந்த ஆசையின் முடிவு இந்தப் பிள்ளை, இதனிடம் சத்தியத்தை நிறைவேற்றிக்கொள்ளும் என்று அவன் கையில் கொடுத்து உடனே கிணற்றில் குதித்தாள். அரசன் திடுக்கிட்டான். கூவி யழுதான், கூடவே சாகலாமென்று துணிந்தான். பிள்ளையைப் பற்றிப் பின்வாங்கினன். இப்போது தான் தெரிந்தது பெண்ணுசை பெரிது என்று. ஆனல் இந்த ஆசைக்கும் முடிவு வந்ததே அது எதனல், என்று யோசிக்கிறன். இறந்த மனைவியே சொன்னுள்; "மகனே! நீ பிறந்து எங்கள் ஆசையைப் பிரித்து விட்டாயே என்று." அப்போது அவனுக்கும் ஆசையற்றதென்று தெரிகிறது. இவனுமோ வேறு ஸ்திரீயை இச்சித்தவனுமல்ல. பரிசுத்தன். ஆனல், அவள் கர்ப்பமாகவே ஆசைவிட்டது. அது ஒன்றுதான். அது தன் மேலும் குற்றமில்லை. உலகத்திலே பிள்ளை பெற்றுக்கொள்ள எல்லோருக்குமே ஆசை. பிள்ளை

தரித்தால் ஸ்திரீ புருஷ ஆசை நீங்குகிறது. முன்போல் இவ்விருவரும் தங்கள் இஷ்டப்படி இன்பம் நுகர்ந்து சுகித்திருக்க முடிகிறதில்லை. ஒரு வருஷ காலத்துக்கு அந்த மனோரம்யத்திற்கு இடமேயின்றி இவர்களைப் பிரித்து வைத்துவிடுகிறது. இந்தப் படிப் பிரிந்து நிற்கும் காலத்தில் புருஷனின் எண்ணம் பலவிதமாய்த் தாவுகின்றது. வேறொரு பெண்ணிடத்துச் சென்றேனும் தான் தற்போது இழந்திருக்கும் இன்பத்தைச் சுவைத்துப் பார்க்கவும் இவன் நெஞ்சிலே பல சிந்தனைகள் உதயமாகின்றன. இன்ப நுகர்தலிலே இவன் பழக்கப்பட்டுப் போய்விட்டன னாதலால்—அந்த அவஸ்தையில், அதை நிவர்த்திக்க சக்தியற்றுள்ள மனைவியின் மீதும் துவேசம் தோன்றுகிறது. அவளும் முன்பு இருந்த அழகெல்லாம் குன்றி, லாவண்ய ரூபம் யாவுமே மாறித் தோன்றுகிறாள். அதைப் பார்க்கப் பார்க்க இவனுக்குப் பின்னும் வெறுப்புண்டாகிறது. இவன் மனதில் அவள் விகாரமாய்ப் படுகிறாள். இவ்வளவு கேடு பாடுகளும் பிரிவுகளும் மனைவியின் வயிற்றிலே ஒரு குழந்தை தோன்றியதிலிருந்தும் உண்டாய்விடுகிறது. அப்படியானால் பிள்ளையுண்டாவது நன்மையோ தீமையோ வென்பது கேள்வி? இதற்கு விடை என்ன? ஆலோசனை யாது?

இராஜகுமாரி கிணற்றிலே குதித்த ஓசையும், அரச மைந்தன் போட்ட கூச்சலுங்கேட்டு எல்லோரும் ஓடிவந்தார்கள். குற்றுயிராய்க் கிணற்றில் காணப்பட்ட இராஜகுமாரியை உடனே தூக்கி எடுத்து பலவித உபசாரங்கள் செய்து பிழைப்பு மூட்டி விட்டனர். அப்பால் இராஜகுமாரன் அவளைக் கட்டித்தழுவி முத்தமிட்டுக்கொண்டு, கிணற்றிலே அவள் குதித்து விட்டபோது தான் கொண்ட சந்தேகங்களை யெல்லாம் சொல்லி, அதைத் தீர்க்கும்படியாக அவளையே வேண்டிக்கொண்டான். அவளும் சிரித்துக்கொண்டு சொல்கிறாள் :—

அரசே! ஆசை என்பது தான் மாயை. அந்த மாயையில்லாவிட்டால் இந்தப் பிரபஞ்சம் அப்போதே அழிந்து போயிருக்கும். இந்த ஆசையானது கடவுள் விஷயத்திலே திருப்பப்படும்

போது அதைப் பக்தி என்றும், மாதர்கள் விஷயத்தில் காதல் என்றும், புத்திரர்கள் விஷயத்தில் பிரேமை என்றும், பந்துக்கள் விஷயத்தில் பிரியம் என்றும், பெற்ருேரிடத்தில் அன்பு என்றும் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. மறைந்திருக்கிற தித்திப்பை எப்படி யறிகிறது? சமீபத்திலிருக்கிற சக்கரையை வாயிலிட்டு ருசி பார்த்து தித்திப்பு இன்னவித மிருக்கிறதென்று தனக்குத் தானே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். அதுபோலவே, மறைவாக இருக்கும் கடவுளிடத்திலே நாம் பக்தி செலுத்தவேண்டுமாஞல், அந்தப் பக்தியின் சுவை இன்னவித மிருக்குமென்று அனுபவித்தறிந்து, அப்படித் தெரிந்துகொண்ட பக்தியை, கடவுளிடத்திற் செலுத்தி வணங்கவேண்டும். அதற்கு வழி உலகத்திலே பெற்ருேர், உற்ருேர், நண்பர், மக்கள், மனைவி முதலானுேரிடத்தில் ஆசை வைத்து இன்ன விதமாக நடந்துகொண்டால் அதற்கு ஆசை என்று சொல்லப்படுகிறதென்ற உட்குறிப்பு விவரத்தை நன்குணர்ந்துகொண்டு, அந்த அனுபவத்தால் ஆசையாகிய பக்தியைக் கடவுளிடம்செலுத்தி வணங்கும் விதம் கண்டுகொள்ள வேண்டும். இவ்விதமாய் ஜீவகோடிகள் தம்மை வந்தடையும்படி யாகவே இந்த அருமையான ஆசையை உலகத்திலே கடவுள் உண்டாக்கி யிருக்கிருர். அத்துடன் உலகசிருஷ்டி நீடூழி நிலைக்கப்பண்ணுவதற்காக அந்த ஆசையோடுகூட ஸ்திரீ புருஷ சேர்க்கை இன்பத்தை இரண்டாவதாக அமைக்கப்பட் டிருக்கிறது. இவ்விரு இன்பங்களையும் அடைவதற்கு ஒருவன் அல்லது ஒருத்தி விரும்பினுல், அவர்கள் பெற்ருேர் உற்ருேர் முதலிய பந்துஜனவர்க்கங்களாகிய சைந்யங்களைத் தமது வசப்படுத்திக்கொண்டு அவர்களின் பலத்தினுல் விவாகம் என்கிற கோட்டையைப் பிடித்து, அப்பால் சாந்தி முகூர்த்தமென்கிற இராஜ்யத்தை யடைந்தால் அவர்களின் எண்ணம் ஈடேறும். இந்த உட்கருத்தைக்கொண்டு தான் விவாக காலத்திலே ஒரு இராஜனுக்குள்ள வைபோக ஆடம்பர சகிதமாய் மேளதாள வாத்தியங்கள் கோஷிக்க, அதனிடையே மணமகளும் மணமகனும் இராஜாவும் இராணியும் போல விளங்கு

கிறார்கள். இப்படி விவாகம் நடப்பதற்கு மத்தியில் ஆடவன் மனதில் இனி தனக்கு மனைவியாக வரப்போகிற பெண்மணியைப் பற்றி என்னென்னவோ கனவுகளெல்லாம் கண்டுகொண்டிருப்பான். அவள் மீது அளவற்ற ஆசைத்தாகம் அடைந்திருப்பான். அப்படியே பெண்ணும் தனக்கு இனி கணவனாக வருகிறவனைப் பற்றித் தனது சிறு ஹிருதயத்திலுள்ள ஆசையையெல்லாம் ஒன்று சேர்த்து எண்ணமிட்டுக்கொண் டிருப்பாள். இப்படியாக, இவ்விருவரின் ஆசையும் வெகுதூரம் முற்றிப்போய் பக்குவமடைந்து எப்போது எப்போதென்று விவாக காலத்தை எதிர்பார்த்து நிற்கும்போது விவாகமும் நடந்துவிடுகிறது. இருவருக்கும் மனத்துக்குள்ளே ஆசை பொங்கிக்கொண்டிருக்கிறது. அப்பால் சந்திக்கிற காலத்திலும் அதிகமான சம்பாஷணைக்கு இடம் ஏற்படாதபடி நாணம் நடுவே பிரவேசித்துத் தடுப்பதால், ஒரே தினத்தில் தங்கள் ஆசையைக் கொட்டிவிடாமல் சிறுகச்சிறுக ஒருவர்க்கொருவர் தெரிவித்துக்கொண்டு வாழ்நாள் கழிக்கிறார்கள். இப்படி இந்த விவாக ஆசையானது சிறுகச்சிறுக வெளிப்பட்டு வருவதில், அந்த ஆசையானது ஒருசமயம் குறைந்துபோக நேரும்போதெல்லாம் உடனுக்குடன், தேகசம்பந்த ஆசையானது எதிர்ப்பட்டு, முன் தளர்ந்துபோன ஆசையை அதிகப்படுத்தி, தம்பதிகளின் ஒற்றுமையைப் பலப்படுத்திவிடுகிறது. இதன் பயனாக, பெண்மணி கர்ப்பவதியாகிறபோது அவளைத் தாயார் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் விடுகிறார்கள். இப்போது புருஷனுடைய ஆசையாகிய, செடியிலே, பிரிவாற்றுமை என்ற புஷ்பம் புஷ்பித்து அதன் நறுமணம் எங்கும் கமழ்கின்றது. அப்பால் சில மாதத்திற் கெல்லாம் பாலசூரியப் பிரகாசம் போன்ற குழந்தை சகிதம் மனைவி தன் கணவன் முன்பு எதிர் தோன்றுகிறாள். இப்போது மனைவியாசை, மக்களாசை இரண்டும் சேர்ந்துகொண்டு முன்னிலும் இரட்டித்த ஆசையை உண்டு பண்ணிவிட, தம்பதிகள் வெகு அந்நியோந்நியமாய் இல்லறம் நடத்தி இன்பமாக வாழ்கிறார்கள். இவ்வளவுக்கும் காரண

மாய்ப் பிரகாசிப்பது விவாகம் என்னும் கட்டுப்பாடுதான். இந்தக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் உலகம் இப்போதிருக்கிற சமாதான நிலைமையில் இருக்கமாட்டாது. ஜனங்களை அடக்கி ஆள எத்தனை கோடி அரசர்கள் வந்தாலும் முடியாது. ஒருவன் சுகித்துவரும் பெண்ணை இன்னொருவன் இச்சிக்கவும், பலாத்காரமாய்த் தூக்கிக்கொண்டு போய்விடவும், தேகபலமுள்ளவர்களே சகல இன்பங்களையும் அநுபவிக்கவும், துர்ப்பலமுள்ளவர்கள்—ஏழைகள் முதலானோருக்கு நியாயம் கிடைக்காமற் போகவும், இப்படி உலகமெல்லாம் அலங்கோலப்பட்டு வெகு சீக்கிரத்தில் பஸ்மீகரப்பட்டுப் போகும்படியாக ஆகிவிடும். அப்படி இல்லாமல் உலகம் சமாதான நிலைமையில் இருக்கவும், ஒரே அரசன் ஏகசக்கிராதிபதியாகச் செங்கோல் செலுத்திக் குடிகளைப் பாதுகாத்துவரவும், அண்ணன் என்றும், தம்பி, என்றும், அக்காள் என்றும், தங்கை என்றும் மரியாதைக் கிரமங்கள் தோன்றி குடும்பங்கள் க்ஷேமப்படவும், தேசத்திலே சட்டதிட்டங்கள், நீதிநியாயங்கள் என்ற கட்டுப்பாடுகள் ஏற்பட்டு துஷ்டர்கள் சிக்ஷிக்கப்படவும், நல்லவர்கள் சௌக்கியப்படவும் இப்படிப்பட்ட அளவிடற்கரிய ஆச்சரியகரமான அநுகூலங்களை யெல்லாம் விளைப்பதற்குக் காரணமாயிருப்பது விவாகம் என்கிற இந்த அரிய வரம்தான்.

இப்படி யெல்லாமிருக்க அரசே! உலகத்திலே சிலர் இந்த விவாகக் கட்டுப்பாட்டுக்கடங்காமல் அதை அலக்ஷியம் செய்து தான்றோன்றித்தனமாய் நடந்து கண்டபடி அலைந்து கெட்டு உருமாறிப்போகிறார்கள். பெண்கள் பெரியோருடைய கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு நடவாமல் துஷ்டசகவாசத்தால் மதமீறி வீட்டைவிட்டு வெளிப்பட்டு எவனையாவது இழுத்துக்கொண்டு ஓடிப்போய் விடுகிறார்கள். பிற்காலத்திலே அவர்களுடைய கதையைக் கேட்டால், எவ்வளவோ பரிதாபகரமான விஷயங்களெல்லாம் அதில் அடங்கியிருக்கக் காணலாம். தன் வயதுள்ள பெண்கள் மஞ்சள் குங்குமம் அணிந்து கழுத்தில் தாலியுடன் தத்தம் புருஷர்களோடு சுகித்திருப்பதைக் காணும்போது ஐயோ,

நமக்கு இப்படிப்பட்ட பாக்கியம் இல்லாமற் போயிற்றே என்று அங்கலாய்க்கிறார்கள். இப்படியே பையன்கள் பெரியோர்களுக்கு அடங்கி நடவாமல், வெளியேறிக் கண்டபடி கெட்டுக் காலமெல்லாம் ரோகஸ்தர்களாய்ப் போகிறார்கள். ஏதோ சிலர் தப்பிப் பிழைத்து உருப்படுகிறார்கள். இவ்வாறெல்லாம் இருப்பதினால்தான் அரசே! உலகத்திலே ஆயிரம்பொய் சொல்லியாவது ஒரு தாலி கட்டு என்று வழக்கமாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். கடன் பட்டுக் கலியாணம் செய்துகொள்ளுகிறதுகூட எதுக்கென்றால் விவாகத்தின் அருமை தெரிந்துதான் அப்படிச் செய்கிறார்கள்.

உலகத்தின் கட்டுப்பாடும் விஷயங்களும் இவ்வாறிருக்க, நீர் அதை யொன்றையும் லக்ஷியம் செய்யாமல் உமது நகரத்தை விட்டு வெளிப்பட்டு விட்டீர். சுந்தரமுள்ள கன்னிகையை நேருக்கு நேராகவே தெரிந்து, கண்டுபேசி, காந்தர்வமணம் செய்து கொள்ளவேண்டுமென்ற சித்தாந்தத்துடனே ஊருக்கு ஊராகச் சுற்றிக்கொண்டிருந்தீர். உம்மைப் போலவே; தான் புது நாகரீகம் கற்றுக்கொண்ட சில பேர்கள், நேரில்தானே ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை யொருவர் சந்தித்துக்கொண்டு விவாக சம்பந்தம் செய்து கொள்ளவேண்டு மென்கிறார்கள். இந்த அபிப்பிராயம் நமது தேசத்திற்கு, அதிலும் தற்காலத்துக்குப் பொருத்தமுள்ளதாக மாட்டாது. ஸ்திரீயே யாகட்டும், புருஷனே யாகட்டும், தன்னை யொருவர் சந்திக்க வருகிறார்களென்று தெரிந்தால், அப்போது ஆயிரம் பொல்லாத சேஷ்டைகள் உள்ளவர்களா யிருந்தாலும் வெளிக்கு மகா பரிசுத்தர்களாகவே காண்பித்துக் கொள்வார்கள். அன்றியும், இப்படிப்பட்ட சந்திப்பினால் விவாகமாவதற்கு முன் அந்தப் பெண் தாயாக ஆகிவிடுவதாயிருந்தால் அது எத்தனை கோரமான வீழ்ச்சியாகும்? மேலும் எத்தனை அழகு கெட்ட பெண்ணாயிருந்தபோதிலும் அவளுடைய பெண்பிறப்பாகிய இயற்கையின் வசீகர ஸக்தியானது எப்படிப்பட்ட ஆடவனையும் வசப்படுத்திவிடும். அதிலே புருஷர்கள் நல்லபெண் கெட்டபெண் என்று தெரிந்தெடுப்பது கூடாமையாகி மோசம் போய்விட

சேர்ந்துவிடும். ஆகவே, அரசே! நமது பாரதநாட்டில் பெற்ரேர் களே முன்னின்று தக்க வரன்கள் சம்பாதித்து விவாகம்செய்வித்து வைக்கிருர்கள். ஆனல், தங்கள் குழந்தைகளின் மனேபாவத்தை யறிந்து அதற்கு இதமான விதமாகப் பெற்ரேர்களாகிய பெரி யோர்கள் இயன்றவரை அநுசரித்து நடந்து கொள்ளக் கடமைப் பட்டவர்களா யிருக்கவேண்டும். மக்களின் க்ஷேமத்தைக் கரு தியே பெற்ரேர்கள் எதுவும் செய்கிருர்களானதால், அவர்கள் அப்படித் தம் மக்களுக்குத் தீங்கிழைக்க விரும்புவார்களென்பது பெரும்பாலும் பொருந்தாது.

நாம் இருவருமோ உலக ஒழுங்குக்கு விரோதமாகப் பெற் ரேர் பெரியோர் முதலானவர்களின் அநுமதியின்றி ஒன்று சேர்ந்தோம். விவாகம் நடந்து ஒன்றுபடுவதிலுள்ள ஆசையின் பூர்த்தி இதில் விசேடமாகப் பிரதிபலிக்காமல் போய்விட்டது. புருடர்கள் அந்த சமயத்துக்கு என்ன செய்யச்சொன்னலும் செய் வார்கள். அப்படியே நீர் ஆசையின்மீது சத்தியம் செய்து கொடுத் தீர். சயனகாலங்களிலும்கூட ஸ்திரீ புருஷர்கள் வெவ்வேறு படுக்கை கொள்ளவேண்டுமென்பது சாஸ்திர விதி. மனேவி எண் ணெய் இட்டுக்கொண்டிருக்கும் போதும், ஸ்நானம் செய்துகொண் டிருக்கும்போதும், வஸ்திர மில்லாதிருக்கும்போதும் அவளேப் பார்ப்பது மகா பாபம் என்று பெரியோர்கள் கூறுவார்கள். இதை மீறி நடந்தால் ஸ்திரீயினிடத்தில் மனதிற்கு ஒருவிதமான வெறுப்பு மேலிட்டு, அவர்களிடத்தில் புருஷர்கள் கொண்டிருக்கப் பட்ட ஆசையானது குறைந்துபோகுமென்கிற காரணத்தால் இந்த ஏற்பாடுகளெல்லாம் உண்டாயிருக்கிறது. தாரமான ஸ்திரீயைப் புருஷன் கண்ணெடுத்தும் பார்க்கலாகாதென்று எதற்காக ஏற் படுத்திஞர்களென்பதை சாஸ்திர ரீதியாக இல்லாமல், வைத்திய ரீதியாகப் பார்த்தாலும், அதில் எவ்வளவோ பிரயோஜனங்கள் இருக்கிறதென்றும், அந்தக் காலத்தில் தேக சம்பந்தப்பட்டு நோய் களுக் காளாகாமல் தப்புவிக்க அது நல்ல மார்க்கமாயிருக்கிற தென்றும் அறிகிருேம். முதலில் பிரசவத்தின்போது பெண்ணேத்

தாய்வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போய்விடுவதுகூட, கர்ப்பிணி யாய் இருக்கும் சமயத்தில் அடிக்கடி அவளைப் பார்க்க நேரிடுவதில் ஆடவன் மனதுக்கு அசங்கியம் உண்டாகாதிருக்கவும், அதனால் ஆசை குறைந்து போகாதிருக்கவும், தேக சம்பந்தத்தால் கருச் சிதைவு படாதிருக்கவுமே யாகும். இவ்விடத்திலோ அவ்வாறு ஒன்றும் நடக்கவில்லை. என்னை நீர் பார்த்ததும் மனைவியாகக் கொண்டுவிட்டீர். அதனால் விவாகத்தின் அருமை புலப்படாமற் போய்விட்டது. அப்பால் என்னுடன் எல்லா சமயங்களிலும் உடன் இருந்து வந்தீர். பிரிந்து சந்திப்பது என்பது இல்லாமல் சதா என்னுடனேயே ஊடாடிப் பழகிக்கொண்டிருந்ததில் உமக்கு என்னிடம் வெறுப்பு ஏற்படக் காரணமாயிற்று. அந்த வெறுப் புக்குக்கூடக் காரணம் ஆசைதான். அதிக ஆசையினால் என்னைப் பிரியாதிருக்க நேரிட்டதில், அந்த ஆசையே கடைசியில் நமக்குக் கெடுதியாக முடிந்தது. இதனால்தான் எதிலும் மிதம் வேண்டு மென்கிறார்கள். பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பது கூட இதைப் பற்றித்தான். இது இப்படியிருக்க, நான் ஆதியிலே ஆசை யின்மீது சத்தியம் வாங்கியதின் காரணம் யாதென்றால், ஸ்திரீ புருஷ ஆசையானது கடைசியில் புத்திரோற்பத்தியில் முடிகிறது. அந்த ஆசையே குழந்தையுருவமாகப் பிரதிபலிக்கின்றது. ஆகவே ஆசையைக் காப்பாற்றுவதாக நீர் சத்தியம் செய்ததானது குழந் தையைக் காப்பாற்றுவதாய்ச் சத்தியம் செய்ததாகிறது. குழந் தையைக் காப்பாற்றப் புருஷனால் முடியாது. ஸ்திரீயிடமிருந்தே அமிர்தமாகிய பால் சுறந்து அக்குழந்தையைப் போஷிக்கவேண்டு மென்பது சிருஷ்டி கர்த்தரின் கட்டளை. புத்திரோற்பத்தியின் போது கர்ப்பம் முதலியவைகளைப் புருஷன் திருஷ்டித்து ஸ்திரீ யின்மீது வெறுப்படையவும், பிரஸவகால துன்பத்தால் புருஷ ஸல்லாபத்தை ஸ்திரீ வெறுக்கவும் நேர்ந்து இவ்விதமாக இவ்விரு வருடைய ஆசைக்கும் ஒரு பிரிவு ஏற்பட்டு விடுகிறது. என்ன பிரஸவ வைராக்கியமாயிருந்தாலும்ஸ்திரீகளுக்கு இயற்கையாகவே புருடனிடத்தில் அதிகப் பற்றுதலும் ஆர்வமும் உண்டாகலின் மறு

படியும் தங்கள் ஆசையைக் கிளப்பிக்கொள்கிறார்கள். ஆனால் புருஷர்களோ ஆசைக்கு நேர்ந்த பிரிவைப் பின்னும் பிரிக்கவே பார்க்கிறவர்களாயிருப்பதில், புத்திர வாஞ்சையானது மத்தியிலே உதயமாகி, அக்குழந்தையைப் போஷிக்கும் நிமித்தமாக மனைவியிடமும் பழைய ஆசையைத் திருப்பிக்கொள்ளும்படி செய்கிறபடியால், காலக்கிரமத்தில் இவ்வித பிரிவினைக் கிடமின்றி முன்னிலும் அதிகமாக அன்னியோன்னியப்பட்டு விடுகிறார்கள். ஆகவே ஸ்திரீ புருஷர்களைப் பிரிப்பதும் பிள்ளை ஆசையே; அவர்களை மறுபடியும் ஒன்று சேர்ப்பதும் பிள்ளை ஆசையே. இது இவ்வாறாக, என்னரிய காதலரே! ஆதியிலே என்னைக் காந்தர்வமாக இல்லாமல், பெற்றோர் அநுமதி பெற்று விவாகம் செய்து பிறகு சுகித்திருந்தீரானால், அந்த விவாக தருமத்திற் கேற்றபடி காரியங்கள் நடந்து, நீங்களும் விவாகத்தின் அருமை தெரிந்து வெறுப்புப் பாராட்டாது விஸ்வாசமாகக் காலங் கழிக்கும்படி ஏற்பட்டிருக்கும். உலகக் கட்டுப்பாட்டுக்கு மீறி நடந்ததின் பயன்தான் இத்தனை விபரீதத்திற்கும், இவ்வளவு சீக்கிரத்தில் நமது ஆசைக்கு முடிவு உண்டாவதற்கும் காரணமாயிற்று. நான் இதுகாறும் கூறிய கருத்துகள் அனைத்தையும் கற்கண்டு பாகாகத் திரட்டி நமது ஔவையார் தேசத்தோ டொத்துவாழ் என்று கூறியதோடு நில்லாமல், ஊருடன்கூடிவாழ் என்றும் மிகவும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். காந்தர்வ விவாகமானது சாஸ்திர ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உலகத்தோடு சேர்ந்து வாழவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கு, அது பிரஜாபத்திய விவாகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தால்தான் பொன்மலர் நாற்றமுடைத்தாம். அப்படிக் காந்தர்வ விவாகம் பிரஜாபத்திய விவாகத்தோடு சம்பந்தப்பட்டிருந்தபோதிலும் அதிலுங்கூட அநேக தவறுதல்கள் உண்டாகி விடுகின்றன. அதற்கு நாமே சாக்ஷியாக இப்போது நிற்கிறோம். ஒரு பொருளை விரும்பியதும் கொடுத்துவிட்டால் வெகு சீக்கிரத்தில் அதன் அருமை தெரியாமற் போய்விடுகிறது. காந்தர்வ மணத்தின் சங்கதி இப்படியே

யிருக்கிறது. பிரஜாபத்திய மணமோ, விரும்பிய பொருளை உடனே அடையப்பெறுதற்கில்லாமற் பண்ணி, ஆசையை நன்ருக முதிரச் செய்து அப்பால் இஷ்ட பூர்த்தி கொடுக்கிறது. நெடுநாள் எதிர் பார்த்துப் பிறகு நிறைவேறிய ஆசையானதால் நாட்பட நிலைக்க வும் செய்கிறது. ஆகவே காந்தர்வமணம் சிறந்ததாயினும் பிரஜா பத்திய மணத்தினுல் உண்டாகக்கூடிய பலன்கள் இதில் அதிகம் தோன்றுவதற்கில்லாமலே போய்விடுகிறது. காந்தர்வ மணத்தை விரும்பிச் செய்துகொண்ட சகுந்தலா இராஜசபா மண்டபத்தில் துஷ்டியந்தனுல் மனைவியல்ல வென்று மறுக்கப்பட்டுப் போனுள். வள்ளி சுப்பிரமணியரை காந்தர்வமாடியதில் பின்னுல் எண்ணற்ற பேர்கள் மடியும்படியான யுத்தம் மூண்டுகொண்டுவிட்டது. ஆகவே பிரஜாபத்திய விவாகமே சர்வஜன சம்மதமாயும், சமா தானமாயும், மனேக்ரமுள்ளதாயும், நீடித்துப் பலன் தருவதாகவும் இருக்கின்றது. கடைசியாக, பிள்ளையுண்டாவது நன்மையோ தீமையோ என்ற கேள்விக்கு, புத்திரோற்பத்திற்கும் அதனுல் குடும்பவிர்த்தி பெறுவதற்குமே விவாகம் ஏற்பட்டபடியால், பிள்ளை யுண்டாவது கெடுதி என்று சாதிப்பவர்கள் விவாகத்திற்கு இசைந் திருக்காமலே இருக்கவேண்டும். அப்படியின்றி விவாகத்திற்கு ஒப்புக்கொண்டுவிட்டுப் பிறகு பிள்ளையுண்டாவது கெடுதிஎன்ருல் அது அதிகப்பிரசங்கித்தனமானதாகும். மொத்த பாகத்திற்கு அவர் கள் ஊருடன் கூடிவாழ் என்ற கட்டளைக்குட்பட்டு விவாகம் செய்து கொண்டவர்களாயிருந்தால் பிள்ளையுண்டாவது நன்மை க்கே என்று தான் சொல்லி முடிக்கவேண்டும்.

நிற்க, பாரியையுள்ளவனே சுற்றங்க ளுள்ளவன். எவன் பாரியை யுள்ளவனே அவனே நம்பிக்கைக்குரியவன். மனத் துயரங்களாலும், மிகுதியான நோய்களாலும் வருந்திக்கொண் டிருக்கும் ஜனங்கள், கோடைகாலத்தில் தாபமடைந்தவர் தண் ணீரில் ஆறுவதுபோல், தங்கள் மனைவிகளிடம் ஆறுகின்றனர். பெண்கள் ஒப்பில்லாத பரிசுத்த வஸ்து. இது தர்மசாஸ்திரத்தை அனுசரித்தது. இவ்வாறிருப்பினும் நீர் அதைக் கவனியாமல்

என்னைத் தள்ளி விடுவதற்கு இப்போதுகூட மனதுண்டானல் அவ்வாறே செய்து மனோசமாதானம் பெறுக; ஆனல் ஒன்று; அசத்தியத்துக்கு மேற்பட்ட கொடிய பாபம் இவ்வுலகத்திலில்லை. சத்தியம் ஒன்றே உயர்ந்த தர்மம். வாக்குத்தத்தம் ஸத்தியத் துக்கும் மேற்பட்டது. ஆகவே இராஜாவே! வாக்குத்தத்தத்தை விட்டு விடாதீர். ஆசையின் முடிவு இந்தப் பாலகன். தன் சரீரத்தை இரண்டாகச்செய்து பிரிக்கப்பட்ட புத்திரனைத்தான் மனைவி பெறுகிருள். கணவனே மனைவியின் கர்ப்பத்தில் பிரவேசிக்கிறன். அவனே அவளிடம் மறுபடியும் ஜனிக்கிறன். இவ்வாறு இவர்கள் ஒருவருக்கொருவர் காரணமாக இருக்கின்றனர். ஆதலால் புத்திரனை எடுத்துக்கொள்ளுங்கள். இது சிறந்த ஐஸ்வரியம். விடத் தகாதது. தன் உயிரான புத்திரனைக் காப்பாற்றுங்கள். அப்படி நீர் காப்பாற்றுவதானது, ஆசையின்மீது அந்த நாள் செய்த சத்தியத்தை நிறைவேற்றினது போலாகும் என்று தன் அபிப்பிராயத்தைக் கூறிமுடித்தாள்.

தன் நாயகி சொல்லி வந்தவைகள் அனைத்தையும் வெகு சாவதானமாகக் கருத்தூன்றிக் கேட்ட இராஜகுமாரன் அவளுடைய வித்வத்திறமைக்கு மெச்சித் தான் அவளுக்குக் கொடுமை செய்ததற்காக மன்னிப்பு பெற்றுக்கொண்டு பின்வருமாறு சொல்கிருன்:—

என் மனங்கவர் மானே! பாவாய்! நம் பாரத பூமியில் விவாகம் என்பது ஊனமில்லாத ஸ்தாபனம். ஆகையால் அதைப்பற்றிச் சீர்திருத்தம் செய்யவேண்டியது அனுவசியம். ஆசை என்னும் வார்த்தையைச் சரியானபடி விவரித்துரைப்பது கஷ்டமாயிருக்கிறது. உனக்கு அதைப்பற்றிச் சொல்லத்தெரிந்ததுபோல, ஒவ்வொருவருக்கும் அது அநுபவ சித்தமாக வேண்டுமேயன்றி வாயால் சொல்லமுடியாதது. பூர்வத்தில் சில மகான்கள் ஆசை என்னும் உணர்ச்சியைக்கொண்டு பெரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கிருர்கள்.

பெண்ணும் ஆணும் அன்புகொண்டு ஆசை மிகுந்து வாழ்

வதே இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பம். உணவும், ஸ்நான மும், பூவும், சந்தனமும்—முதலிய இன்பங்களெல்லாவற்றைக் காட்டிலும் காதலின்பமே சிறந்தது. காதலுடைய இருவரும் கருத்திலே ஒன்றுபட்டவராய் ஆதரவு கொள்ளும் நிலையை, மனிதர்கள் கட்டுப்பாடுகளாலும், பணச்செருக்காலும், அநீதியாலும் பெற விரும்புகிறார்கள். தற்கால நிலைமையில் மனமொத்து இராத ஆண் பெண் உறவினால் வரும் துன்பந்தான்—மனிதருக்கு இவ்வுலகத்தில் மற்றெல்லாத் துன்பங்களைக் காட்டிலும் அதிக மாக ஏற்பட்டு விட்டது. விவாகமுறையை நமது நாட்டில் சில வகுப்பார் நாகம் போலே செய்து விட்டார்கள். தெய்வம் கொடுக்கும் இன்பத்தை மனிதர்கள் அறியாமையாலும், பாப சிந்தையாலும், இடைகாலத்திற் றோன்றிய சில கட்டுப்பாடுகட்கு உட்பட்டும் துன்பமாக மாற்றிக் கொள்கிறார்கள்.

மூவகை ஆசைகளில் மண், பொன்—ஆசைகள் வெளி ஆசைகளாம். பெண்ணாசைமட்டுமே ஐம்புலன்களையும் பாசபந்த முறச்செய்யும் உள் ஆசையாம்—அகத்தாசையாம். அந்த ஆசையை வளர்க்கும் பெண்கொடிகளைக் கௌரவிக்காத நாடு ஈனநிலை எய்தும். ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு. மனம் உண்டு, புத்தியுண்டு. ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போன்றவருமல்லர். ஸாதாரணமாக ஆண்மாதிரியே தான். வெளி உறுப்புகள் மட்டும் மாறுதல். ஆத்மா ஓரே மாதிரி. விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை. உயிர்த்துணை. வாழ்க்கைக்கு ஊன்றுகோல். ஜீவனிலே ஒரு பகுதி. பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக் கெல்லாம் ஆதாரம். பாவங்களுக்கெல்லாம் அஸ்திவாரம். அநீதிகளுக்கெல்லாம் கோட்டை. ஸ்திரீகள் அபலைகள்—அவர்களால் என்ன முடியும்?—என்று சிலர் சொல்லுகின்றனர். அபலைகளாயுள்ள ஸ்திரீகளே உலகத்தில் அருமையும் பெருமையுமான காரியங்களைச் செய்திருக்கின்றன ரென்பது சரித்திர சித்தாந்தம்.

ஒரு புருஷனும், ஒரு ஸ்திரீயும் ஏகமாய் முதலில் ஐக்கியப் படுதற்கு நாள், நக்ஷத்திரம் பார்த்தல் சாஸ்திர ஸம்மதம். ஏனென்றால், இந்தச் சேர்க்கையானது இன்றோடு நின்று போகிறதல்ல. எனது ஜீவனும் உனது ஜீவனும் இருக்கும்வரை ஒருவரை யொருவர் விட்டுவிடக் கூடாத சிநேகத் தன்மையுடையவரா யிருத்தற்கு அந்த நல்ல நாளும் நக்ஷத்திரமும் துணைபுரிகின்றது. இது பெரியோர்களின் ஆக்ஞை. அந்த ஆக்ஞைக்குமீறி நாம் நடந்ததின் விளைவே இப்போது நமக்குள் ஏற்பட்ட இந்தப் பிரிவினை. எதுவும் பட்டால்தான் தெரிகிறது. இனி என் உயிர்த்துணை நீயே.

“ஊன் பெறு முயிரு முணர்ச்சியு, மன்பு,
முக்கழு, முண்மையு, மென்னைத்
தான் பெறு தாயுந், தந்தையுங், தருவுந்,
தனிப் பெருந் தெய்வமுந், தவமும்,
வான் பெறு பொருளும், வாழ்வு, நற்றுணையு,
மக்களு, மனைவியு, முறவும்,
நான் பெறு நண்பும்,—யாவுநீ யென்றே
நம்பினேன்; கைவிடே லெனையே!”

என்று கூறித் தன் காதலியைத் தழுவிக்கொண்டான்.

ஏற்கெனவே இருந்த பெண்ணாசையுடன், இப்போது புத்திர வாஞ்சையும் கூடிக்கொண்டதால், முன்னிலும் அதிக தாம்பத்திய நேசத்தோடு பத்தினி புத்திரர்கள் சகிதம் வெகுகாலம் இன்பமாக வாழ்ந்திருந்தான்.

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ! ஆசைக்கு ஒரு எல்லையும் உண்டோ? ஆசை மேலேயே ஆசை வளர்கிறது. அதற்கு முடிவு எது? எல்லை எது? கடவுளின் மாயாவிலாஸம் நன்கு பிரகாஸமாவதும் ஆசையில்கா[illegible]

முற்றிற்று.

கதையை யல்ல
கருத்துகளை உணருங்கள்.

# பழையநாள் நினைவு*

(1) எத்தனை இரவோ, ஊர் அடங்கியபின்,
நித்திரையினில் யான் உணர்வு நீங்குமுன்,
ஆதியில் நிகழ்ந்தன அநேகவற்றை, என்
பேதை உள்ளம் பிரியமொ டெண்ணுமால் :—
என்னிள வயதில் இன்பினில் நிகழ்ந்த
புன்னகை கள் ; துயர் பொருமுகண் ணீர்கள் ;
மன்னிளங் காதலில் உரைத்த வார்த்தைகள் ;
பின்புஒளி மழுங்கி இறந்த பெற்றிய,
இன்பும் அன்பும் இலங்கிய விழிகள் ;
பிற்காலத் திடிந் தழிந்த பெற்றிய,
உற்சா கம்கிளர்ந் தோங்கிய உளங்கள் ;—
இன்னணம் நிசப்த இரவினில் இன்துயில்
துன்னி அயர்ந்து யான் தூங்கிடும் முன்னர்.
சென்றன ஞாபகம் செய்து,
இன்றென துள்ளம் எண்ணி ஏங்குமே !

(2) ஒருவர்க் கொருவர் உற்ற நண்பர்கள்,
பருவ மாரி பட்டுதிர் இலைகள் போல்,
என்னைச் சுற்றிலும், என்கண் காண,
இந்நாள் வரையில் இறந்தவர் தமையான்
உன்னுங் காலை, ஓர் விருந்துச் சாலையில்,
இன்னொளி விளக்குகள் எல்லாம் அவிந்து,
மன்னு தோரண மாலைகள் வாடி,
தன்னை அன்றிமற் றெவரும் தவிர்ந்தபின்,
தானே தனியாய் உலாவும் தமியனை
யானும் இன்று மானுவேன் மாதோ !
இன்னணம் நிசப்த இரவினில், இன்துயில்
துன்னி அயர்ந்து யான் தூங்கிடும் முன்னர்,
சென்றன ஞாபகம் செய்து,
இன்றென துள்ளம் எண்ணி ஏங்குமே !

* Adapted from Thomas Moore's *The Light of Other Day's*

இது ஸ்ரீமான் அ. மாதவ ஐயரவர்கள் பி. ஏ. மொழிபெயர்த்தது.
தமிழில் முதன் முதலில் நாவல்கள் எழுதி வழிகாட்டிய
பெரியோர் இவர் தான்.